பக்கங்கள்: பன்னிரண்டு

...gistered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 18 | வெள்ளிக்கிழமை | (30-04-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 133

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.





# தமிழ்ச் செல்வன் - பியுறுஹெவ்டே கிளிநொச்சியில் முக்கிய சந்திப்பு

(கிளிநொச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயித்தியமலை பகுதியில் விடுதலைப் புலிகளின் ஏழு போராளிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை மேற்கொண்டு அதன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் டொன் பியுறு ஹெவ்டேயிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொணடுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்றுக் காலை 11.15 மணியளவில் இடம்பெற்ற சந்திப்பில கலந்துகொண்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் பியுறுஹெவ்டேயிடம் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

அண்மையில் மட்டக்களப்பு ஆயித்தியமலையில் விடுதலைப் புலிப்போராளிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக விசேட உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று வந்திருந்தார்.

அங்கு நடைபெற்ற சந்திப்பின் பின்னர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் மேலும் கூறியதாவது,

நடந்துமுடிந்த பொதுத்தேர்தலின் பின் அரசாங்கம் மாறியதை அடுத்து யுத்த நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது சம்மந்தமாக இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக யுததநிறுத்த கண்காணிப் புக்குழுத் தலைவரிடம் கேட்டு அறிந்து கொண்டோம்.

புதிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது தொடர்பாக இதன்போது எதுவும் கூறுவது பொருத்தமில்லை. எனவே நோர்வே தூதுக் குழுவினர் எங்களை சந்திக்வுள்ளனர். அரசாங்கத்தின் நிலைப் பாடு தொடர்பாக அவர்கள் எடுத்துக் கூறுவார்கள் அதன்பின் எமது தலைமைப் பீடத்தின் நிலைப் பாடுகளை தெளிவாக முன்வைப்போம்.

மடடக்களப்பு சம்பவம் தொடர்பாக நாங்கள் கண்காணிப்புக் குழுவுக்கு எமது நிலைப்பாட்டை முன்வைத்திருக்கின்றோம். அதில் முக்கி

(12-ம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் பேச்சுவார்த்தை ஜு ன் மாத இறுதியில் ஆரம்பம்

## அமைச்சர் கதிர்காமர் இந்தியாவில் தெரிவிப்பு

(புதுடில்லி)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஜுன் மாத இறுதியில் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

இந்தியாவுக்கு இரண்டுநாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர் லக்ஷ்மன கதிர்காமர் நேற்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சின்ஹாவையும், மற்றும் வெளியுறவு அமைச்சு அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினார்.

இலங்கை அரசின் சமாதான முயற்சி தொடர்பாக அங்கு எடுத்து விளக்குகையில, அமைச்சர் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் நேரடியான பங்களிப்பை இந்தியா வழங்கவேண்டும் என்றும் இதனையே தற்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்கம் விரும்புவதாகவும் கூறினார். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தனது இந்திய விஜயத்தின் போது இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ராஜேஸ் மிஸ்ராவுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின் போது ராஜேஸ் மிஸ்ரா கருத்துத் தெரிவிக்கையில் இந்தியாவை பொறுத்தவரையில் இலங்கையில் எடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளை ஆதரிக்கிறது. ஆனால் இலங்கையில் உள்ள

(12-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்

### அஸ்கிரிய மகாநாயக்க தேரர் வேண்டுகோள்

(கண்டி)

புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்.

இவ்வாறு கண்டி அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஜே.வி.பியின் புதிய அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரிடம் ஆசி பெறுவதற்காக கண்டி சென்றபோதே தேரர் ஆசி வழங்கிய பின் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் புதிய அரசு செயற்பட வேண்டும் என்றும் தேரர் கேட்டுக்கொண்டார். (இ)

## சந்திப்பு

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினருக்கும் படைத்தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் யாழ் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் விடுதலை புலிகள் தரப்பில் யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பருதி, வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா, யாழ். மாவட்ட அரசியல்துறை ஊடகப் பேச்சாளர் இமையவன் மற்றும் யாழ் மாவட்ட தொழிற்சங்க பொறுப்பாளர் சுதா ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-43)

## கந்தப்பொலவில் நிலைமை வழமைக்கு திரும்புகிறது

## பிரதமர் மகிந்த ராஜபக்ஸ கலவரம் குறித்து ஆராய்ந்தார்

(நுவரெலியா)

நுவரெயியா மாவட்டத்தில் தமிழ்மக்கள் அதிகம் வசிக்கும் கந்தப்பொலவில் நேற்று முன்தினம் வெடித்த வன்முறை கலவரம் அடக்கப்பட்டு நிலைமை வழமைக்கு திரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அங்கு சில சில இடங்களில் இன்னமும் பதற்றம் நீங்வில்லை என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் வகையில் பொலிசாரும், ராணுவத்தினரும் கூட்டு ரோந்து நடவடிக்கையை முடுக்கிவிட்டுள்ளனர். அத்துடன் ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் மதுபானக் கடைகளும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை நேற்று கந்தப்பொலவிற்கு விஜயம் செய்த பிரதமர் மகிந்த ராயபக்ஸ அங்கு விசேட கூட்டம் ஒன்றை நடாத்தி அப்பிரதேச நிலைமை குறித்தும், இழப்புக்கள் குறித்தும் வழங்கப்படவேண்டிய இழப்பீட்டு உதவிகள் குறித்தும் ஆராய்ந்தார்.

(12-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மும்முனைகளில் மேதின எழுச்சிப் பேரணி

(வவுனியா)

வவுனியாவில் மும்முனைப் பேரணிகளுடன் நாளை மேதின நிகழ்வு நடைபெற இருக்கின்றது.

தமிழ்த் தேசிய எழுச்சியை வெளிப்படுத்தல், தமிழ்த்தேசிய வளங்களை முதன்மைப்படுத்தல், தொழிலாளர் உரிமைக் குரலை வெளிப்படுத்தல் ஆகிய மூன்று அம்சங்களை வலியுறுத்தி தேசிய எழுச்சிப் பேரவையின் ஒழுங்குபடுத்தலில் மேதின நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது.

கண்டி வீதி, ஹொரவப்பொத்தானை வீதி, யாழ் வீதி ஆகிய மூன்று திசைகளில் இருந்து புறப்படும் பேரணி வவுனியா நகரசபை மைதானத்தை வந்தடையும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பேரணிக்கு தலைமை தாங்குவர். பேரணியில் ஊர்திப்பவனியும் இடம்பெறவுள்ளது. (த-13)

# ருமேனிய உதைபந்து அணியிடம்
# ஜேர்மன் அணியினர் படுதோல்வி

யூறோ 2004உதைபந்து வெற்றிக்கிண்ணத்திற்கான ஆயத்தப்




போட்டி ஒன்றில் பலம்வாய்ந்த ஜேர்மன் அணியை உதைபந்தாட்ட வரலாற்றின் ஆரம்பகால உலகச் சம்பியனான ருமேனிய அணி படுதோல்வியடையச் செய்தது.

புச்சாறஸ்ட் நகரில் இடம்பெற்ற இப் போட்டியில் ருமேனிய அணி சரமாரியாக 5கோல்களைப் போட்டு ஜேர்மனி அணியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆட்டம் முடிவடைவதற்குச் சிறிது நேரத்திற்கு முன் ஜேர்மன் வீரர் பிலிப் லாஹ்ம் ஒரு கோலைப் போட்டார்.

இதுகுறித்து ஜேர்மன் பயிற்றுவிப்பாளர் ரூடி வொல்லரும், அணித் தலைவர் ஒலிவர் கானும் குறிப்பிடுகையில் மிகக்கேவலமான ஒரு தோல்வியை அடைந்திருக்கிறோம். இது மன்னிக்கப்படமுடியாதது. இருப்பினும் இத்தோல்வியை மறந்துவிட்டு ஜேர்மனி முன்னேறிச் செல்லும் என்று தெரிவித்தார்.

2001ஆம் ஆண்டிலும் இங்கிலாந்திடம் இவ்வாறான அதிர்ச்சித் தோல்வியடைந்த ஜேர்மனி அவற்றை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு உலகக் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டத்தில் நுழைந்தது குறிப்பிடத்



தக்கது.

(யே)

## காவேரி வெற்றிக் கிண்ணம் யாழ்ப்பாண அணியிடம்

தமிழக விளையாட்டுத் துறையிரின் ஆதரவில் வட அல்வை இளங்கோ வி.கழகம் நடாத்திய, மின்னொளியிலான வீர வேங்கை காவேரி ஞாபகார்த்த வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி நாள் ஆட்டங்கள் 24.04.2004சனிக்கிழமை பி.ப.5.30மணிக்கு நடைபெற்றன.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திரு கி.பாப்பா அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைக்க இளங்கோ ச.ச.நிலையத்தின் போசகர் திரு.மு.அநாதரட்சகர் (ஆசிரியர்) நிலையக் கொடியினை ஏற்றி வைத்தார்.

தொடந்து அகவணக்கம், வீர வேங்கை காவேரியின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்தல் என்பன இடம்பெற்றபின் காட்சிப் போடடி ஆரம்பமாகியது. இப்போட்டியிலேயே அல்வாய் இளங்கோ வி.க.எதிர்த்து அல்வாய் விக்கிரமன்ஸ் வி.க.மோதியது. இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

பின்னர் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் அல் வாய் நக்கீரன் வி.கவை எதிர்த்து வதிரி பொமேஸ் வி.க.மோதியது. இதில் வதிரி பொமேஸ் வி.க.வெற்றியீட்டி மூன்றாம் இடத்தைத் தக்க வைத்துக்கொண்டது.

இறுதிப் போட்டியிலேயே அல் வாய் மனோகரா வி.கவை எதிர்த்து யாழ்ப்பாணம் வி.கழகம் மோதியது இப்போட்டி ஆரம்பமாகியதும். வாணவேடிக்கைகளும் வானத்தை அழகுபடுத்தியது. மிகவும் விறு விறுப்பாக நடைபெற்ற இப் போட்டியிலேயே யாழ்ப்பாணம் வி.க.வெற்றியீட்டி வெற்றிக்கிண்ணத்தை யும், நான்கு அடி உயரமுள்ள சுற்றுக்கிண்ணத்தையும் கைப்பற்றிக் கொண்டது.

இப் போட்டியில்லேயே சிறந்த சூட்டராக மனோகரா வி.க. வீராங்கனை செல்வி யோ.றபேக்கா அவர்களும் இப்போட்டியின் நாயகியாகவும், இச் சுற்றுப்போட்டித் தொடர் நாயகியாகவும் யாழ்ப்பாணம் வி.க. அணித்தலைவி செல்வி யோ.றெமின்ராவும் தெரிவுசெய்யப்பட்டனர். (யே)

# விளையாட்டுச் செய்திகள்

## அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாண அணியினர்

எவரெடி வெற்றிக்கிண்ணத்திற்காக நடாத்தப்பட்டுவரும் 19வயதிற்குட்பட்டவர்களுக்கான போட்டி வரிசையில் இன்னோர் ஆட்டம் கடந்த 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5மணி தொடக்கம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இவ் ஆட்டத்தில் யாழ்.லீக் அணி கண்டி லீக் அணியை 4:1 என்ற கோல்கணக்கில் வென்று அரையிறுதி ஆட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது.

இவ் ஆட்டத்தில் யாழ்.அணி வெகு சிறப்பாக ஆடி இடை வேளைக்கு முன்பு இரு கோல்களையும் இடைவேளையின் பின் இரு கோல்களையும் போட்டது. ஆனால் கண்டி அணி எவ்வளவோ முயன்றும் யாழ்.பின்னணி வீரர்களும் கோல் காப்பாளரும் மெச்சத்தக்க விதத்தில் சிறப்பாக ஆடியதனால் ஒரே ஒரு கோலை மாத்திரமே போட்டது. அத்துடன் பெனால்டி மூலம் கோல்போட இருந்த ஒரு வாய்ப்பையும் கைநழுவ விட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக ஏ.அருளானந்தசோதி, வி.சாரங்கன், வி.ரஜனிக்காந் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

(யே-110)



ஸ்கன்டினேவிய நாடுகளில் உதைபந்தாட்டத்தில் தமக்கென நிலையான ஒரு இடத்தை வைத்திருக்கும் சுவீடன் அணியின் நம்பிக்கை நட்சத்திரமான [illegible] போர்த்துக்கல் அணிக்கெதிராக தனது நாட்டு அணி மோதவிருக்கும் இத்தருணத்தில் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். போர்த்துக்கலுக்கு எதிரான சிநேகபூர்வ ஆட்டத்தில் சுவீடன் அணிக்கு இவர் தலைமைதாங்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் மீள் பார்வை

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் ஏதென்ஸ் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகவிருக்கின்றன. இதனை ஒட்டி ஒலிம்பிக்கின் மறக்க முடியாத சில ஞாபகங்களை நாம் மீட்டிப் பார்க்கவிருக்கிறோம்.

1936ஆம் ஆண்டு பேர்லினில் நடைபெற்ற 100மீற்றர் போட்டியில் ஜெஸி ஓவன்ஸ் 5வது முறையாகத் தங்கம் பெற்றார்.



ஜெஸி ஓவன்ஸ்

1968ல் மெக்ஸிக்கோவில் இடம் பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பொப் பீமன் 29அடி 2அரை அங்குல தூரம் நீளம் பாய்ந்து அதற்கு முந்திய சாதனையை 21 3/4 அங்குல வித்தியாசத்தில் முறியடித்தார்.

1992பார்சிலோனா ஒலிம்பிக்கில் பிரித்தானிய வீரர் டெரெக் றெட்மன்ட் தனது தொடைத் தசைநார்கள் கிழிந்துவிட்ட நிலையிலும் 400மீற்றரின் மிகுதி 150மீற்றர் தூரத்தையும் தனது தந்தையார் உற்சாகப்படுத்திக்கொண்டு அருகே ஓடிவர அவர் 65,000பார்வையாள ரின் கரகோசத்தின் மத்தியில் ஓடி முடித்தார்.

1988ல் சியோல் ஒலிம்பிக்கில் கனேடிய வீரர் பென்யோன்ஸன் 100மீற்றரை 9.79விநாடிகளில் ஓடி அபாரமான உலக சாதனை புரிந்தார்.

ஆனால் தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களை அவர் உட்கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அவரது பதக்கம் பறிமுதல் செய்யப்பட்டு இரண்டாவது வந்த அமெரிக்க வீரர் கார்ல் லூயிக்கு வழங்கப்பட்டது.

(யே)

## இன்று கொடிகாமத்தில் மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்வி வலய மெய் வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.கொடிகாமம் அரசினர் வித்தியாலய இராசா மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளர் மு.வ.செல்வராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

(யே)

# மூத்த வீரர்கள் திரும்பினர்
# ஆயினும் நேற்று ஆடவில்லை

சிம்ப்பாப்பே கிரிக்கெட் அணியின் சர்ச்சைக்குரிய 15வீரர்களும் இன்று மீண்டும் பயிற்சிகளுக்குத் திரும்புகின்றனர்.

ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இவர்கள் பயிற்சிக்குத் திரும்பிய பொழுதும் 5வதும் இறுதியுமான ஒரு நாள் சர்வதேச போட்டியில் கலந்து கொள்ளவில்லை.

கிராண்ட் பிளவர் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் இனிமேல் தங்களது சட்ட ஆலோசகர் மூலமே சிம்பாப்வே கிரிக்கெற் யூனியன் அதிகாரிகளுடன் தாம் தொடர்புகொள்வர் என்றும் எதிர்வரும் டெஸ் தொடர்களில் விளையாடுவதென்பது தங்களது கோரிக்கைகள் எப்படிக் கையாளப்படும் என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் என்றார்.

இவ்விரு பகுதியினருக்குமிடையில் இணக்கப்பாடு ஒன்றைக் காணும் முயற்சியில் மச்முசுண்டா எனும் அதிகாரி அதி தீவிரமாக இறங்கியுள்ளார்.

(யே)



# இந்தோனேஷிய முஸ்லிம் மதகுரு பொலிஸாரின் தீவிர விசாரணையில்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் தற்பொழுது சிறைத்தண்டனை அனுபவித்து வரும முஸ்லிம் மதகுருவான அபூபக்கர் பஸீரை இந்தோனேஷியப் பொலிஸார் சிறையில் வைத்து விசாரணை செய்தனர்.




(AFP PHOTO)

தற்பொழுது இந்தோனேஷியாவில் இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்களுக்கும் அவருக்கும் ஏதாவது தொடர்புகள் இருக்கக் கூடுமா என்பது பற்றி அறிந்து கொள்ளவே அவர்கள் விசாரணை நடததினர்.

ஆயினும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க அவர் மறுத்து விட்டதாக அவரது பேச்சாளர் ஃபவுசன் அன் ஸோரி தெரிவத்தார். வெளிநாட்டு பயண மொன்றில் ஆவண மோசடி செய்தது தொடர்பில் அபூபக்கர் ஒன்றரை வருட சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்.

இன்று அவர் விடுதலை செய்யப்படவிருக்கிறார். இது இந்தோனேஷியாவில் தீவிரவாதத் தாக்குதல்கள் அதிகரிக்க வழி செய்வதாக அமையும் என்று பலரும் அச்சம் தெரிவிக்கின்றனர். அல்குவெய்டா அமைப்பின் ஆசியப் பிராந்தியத்தின் தலைவராக இவர் கருதப்படுவதே இதற்குக் கார்ணமாகும்.

(யே)





அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அரசின் கருக்கலைப்பு மற்றும் குடும்பக் கட்டுப்பாடு போன்ற சுகாதாரப் பிரச்சினை தொடர்பான கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வாஷிங்டனில் ஆயிரக்கணக்கானோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# அமெரிக்காவுக்குள் நுழைந்த 189 பேர் கைதுசெய்யப்பட்டனர்

(டெக்ஸ்ட்லா கடர்ஸ்)

இரு டிரெய்லர்களுக்குள் ஒளிந்து கொண்டு திருட்டுத்தனமாக மெக்சிக்கோவுக்குள் நுழைய முயன்ற 189 பேரை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

மெக்சிக்கோவின் தென்கோடி மாநிலமான மத்திய சியாபஸில் 18 சக்கர டிரக் வாகனம் சென்று கொணடிருந்தது. அப்போது அதை அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்.

அதில் இருந்த இரு டிரெய்லர்களுக்குள் 134 ஆண்கள்,36 பெண்கள் மற்றும் 19 குழந்தைகள் இருப்பதைக் கண்டறிந்தனர். அவர்களில் 7வயது சிறுமியும் இருந்தாள. டிரெய்லருக்குள்ளே வெப்பநிலை 43டிகிரி செல்சியஸாக இருந்தது என சியாபஸ் அட்டர்னி ஜெனரல் அலுவலகச் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

டிரெய்லர்கள் மிக இறுக்கமாக மூடப்பட்டிருந்தன. டிரெய்லர்களைத் திறப்பதற்கு அதிகாரிகள் ஒரு மணி நேரத்தைச் செலவிட வேண்டியிருந்தது. காற்று ஏதும் புகாதவாறு ஓரங்கள கடினமான பிளாஸ்டிக்கால் அமைக்கப்பட்டிருந்தன. எனினும் அந்த பிளாஸ்டிக்கில் நிறைய துளைகளைப் போட்டு காற்று உள்ளே புக வழி செய்திருந்தது அக்கும்பல்.

பிடிபட்டவர்கள் அனைவரும் குவாட்டமாலா நாட்டைச் சேர்ந்தவர்கள் எனக் கூறினாலும், மெக்ஸிகோ அதி காரிகள் அதை உறுதிசெய்ய முயற் சிகள் மேற்கொண்டு வருகின்றனர். குவாட்டமாலாவிலிருந்து அமெரிக்காவுக் குள் நுழைய ஏதுவாக,தென் மெக்ஸிக் கோவுக்குள் வீடுவிடுமாறு கடத்தல் காரர்களுக்குத் தாங்கள் பணம் கொடுத் ததாகப் பிடிபட்டவர்கள்,அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

சியாபஸில் இவ்வாண்டில் இவ்வளவு அதிக எண்ணிககையில் ஊடுருவல்

# பாகிஸ்தான் இராணுவம் 50 ஆயிரத்தால் குறைப்பு

பாரிய நிதிச் செலவைத் தடுக்கும் முகமாகப் பாகிஸ்தான் இராணு



வம் தனது படையை 50 ஆயிரத்தால் குறைக்கவிருப்பதாகப் பிரிகேடியர் ஃபயாஸ் அஹமட் ஷத்தி தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்புடனான சந்திப் பொன்றின் பொழுதே பாகிஸ்தான் இராணுவ உயர்பீடம் இம் முடிவை எடுத்துள்ளதாகவும் இதனால் இராணுவத்தின் சண்டையிடும் பலம் எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் இராணுவத்தில் சுமார் 550 ஆயிரம்பேர் இருக்கின்றனர். இவர்களில் ஓடலிகளாகவும் சாதாரண பணியாளர்களாகவும் வேலை செயவோரை நிறுத்தவே இம் முயற்சி மேற்கொள்ளப்படுவதாகக் கருதப்படுகிறது.

(யே)

WORLD NEWS உலக தரிசனம்

# அந்நியச் செலாவணியால் ஆசிய நாட்டுக்கு ஆபத்து

(சியோல்)

ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் கோடிக் கணக்கில் அந்நியச் செலாவணியைக் கையிருப்பில் வைத்திருப்பதால் அந்நாடுகளுக்குப் பெருத்த பொருளாதாரச் சிக்கல் ஏற்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்திருக்கிறது.

1997ஆம் ஆண்டின் முடிவில் எல்லா ஆசிய நாடுகளிடமும் மொத்தமாக 49,700 கோடி அமெரிக்க டொலர்கள் தான் அந்நியச் செலாவணி கையிருப்பாக இருந்தது. இப்போது அது 13 டிரில்லியன் டொலர்களாக இருககிறது. ஒரு டிரில்லியன் என்பது 1,000,000,000,000,000,000 ஆகும்.

இவ்வளவு பெருந்தொகையை உருப்படியாக முதலீடு செய்யாமல் கையில் வைத்திருப்பதால் ஊக வியாபாரிகள் திடீர் திடீரென பங்குச் சந்தைகளில் விலைகளைத் தாறுமாறாக உயர்த்தியும் தாழ்த்தியும் விளையாடுவார்கள். செலாவணி மாற்று மதிப்பு விகிதமும் பெரும் அளவுக்கு மாறும்.

செலாவணி மதிப்பை நிலையாக வைத்திருக்க அரசுகள் எடுக்கும் அன்றாட நடவடிக்கையால பணப்புழக்கம் அதிகரிக்கும்.இதனால் கடன் சந்தையில் வட்டி வீதம் குறைந்து பொருளாதாரத்தில் சேமிப்பு குறையும். இது எதிர்கால முதலீட்டு முடிவுகளைப் பாதிக்கும். இதனால் புதிய ஆசிய நிதிச் சிக்கல் ஏற்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரிக்கிறது.

(யே)




**அத்திலாந்திக் கடலில் அதிகரித்துள்ள கப்பல் சேவையின் காரணமாக அக்கடலில் பெருமளவில் வாழ்கின்ற மனிதருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய திமிங்கலங்களின் சகய வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது. தனது அசௌகரியத்தை வெளிக்காட்டும் திமிங்கலம் ஒன்று.**

# மனைவியை எரித்தார் மகளை சுவரில் அடித்தார் கொலையாளி கொலை

(காபுல்)

தனது மனைவிகளில் ஒருத்தியை



ஜனாதிபதி ஹமீட் கராஸி

எண்ணெய் ஊற்றி எரித்ததுடன், தான் பெற்ற மகளைச் சுவரில் மோதிக் கொலை செய்ததுட்பட சுமார் 20 கொலைகள் செய்த அப்துல்லா ஷாவுக்குப் பொதுஇடத்தில் மரணதண்டனை நிறைவேற்றியது சரி என்று ஆப்கான் அதிகாரிகள் கூறினர்.

1992-96 ஆப்கான் சிவில் யுத்தத்தில் தலிபான் கொமாண்டர் சர்தாத்தின் கீழ் வேலை செய்த ஷா, அவரின் கட்டளையை நிறைவேற்றும் வேட்டை நாய் என்று பெயர் எடுத்தார். ஜலதாபாத்துக்கும் காபூலுக்குமிடையில் பயணம் செய்த பயணிகளை இவர் வேட்டையாடினார்.

மீண்டும் ஆப்கானில் மரணதண்டனை அறிமுகப்படுத்தப்படுமா என்ற அச்சம் இப்பொழுது மனித உரிமை ஆர்வலர்களடம் ஏற்பட்டுள்ளது.

சிறையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை மறைப்பதற்காகவே ஷா கொலை செய்யப்பட்டதாகவும் சிறையில் மரணதண்டனை பெற்ற இன்னும் 20 பேரின் நிலை என்ன என்று ஜனாதிபதி ஹமீட் கராஸிடம் கேள்வி எழுபபபட்டுள்ளது.

(யே)

# டயானாவின் சகோதரர் அடம் மர்ம மரணம்

இங்கிலாந்தின் மறைந்த இளவரசி டயானாவின் அடம் கிட்,கம்போடிய நாட்டுத் தலைநகர் நம் பென னில் தனது வாடகை வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

அவருக்கு வயது 50. அவரது உடலை பொலிஸார் திங்கட்கிழமை கண்டெடுத்தனர்.அதிகப்படியான மருந்தின் விளைவால் அவர் இறந்திருக்கலாம என்று கூறப்படுகின்றது. இங்கிலாந்து அரசி குடும்பத்துடன் அவருக்குத் தொடர்புகள் உள்ளதாக நம் பென்னில் இங்கிலாந்துத் தூதரகம் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளது.

இளவரசி டயானாவின் தாய்,தனது கணவர் ஏர்ல் ஸ்பென்சரை விட்டு வலகிய பின் பீட்டர் கிட் என்பவரை மணந்தார்.இவர்களின் மகன்தான இறந்த அடம் கிட். டயானாவும் அவரது உடன்பிறப்புகளும் தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தவர்கள்.

(யே)

# இந்தியத் தேர்தலில் பூலான்தேவியின் தாக்கம்

(மணிப்பூர்)

1981இல் தன்னை மானபங்கப்



படுத்திய 22 உயர் சாதியினரை சுட்டுக்கொன்ற பூலான்தேவி பின்னாளில் சமாஜ்வாதிக் கட்சியின் எம்.பியாகத் தெரிவானார்.அவரின் தாக்கம் இந்தத் தேர்தல்களிலும் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சம்பல் பள்ளத்தாக்கில் பல வருடங்களாக ஆயுதக் கும்பல் ஒன்றை வழிநடத்திய பூலான் தேவி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுது மூன்று வருடங்களுக்கு முன்னர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தற்பொழுது நடைபெறும் தேர்தலில் அவரது மக்கள் இன்னமும் பூலான்தேவியைப் பற்றியும் அவரது துணிவுபற்றியுமே பேசுகிறார்கள்.

பூலான்தேவி எங்களுக்கு எம்.பியாக இருந்தது தெரியும். அவருக்குப்பிறகு எங்களுடைய எம்.பி யார் என்றே தெரியவில்லை என்று அவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள்.

(யே)

# இனங்களின் உரிமை, நல்லாட்சி இவையே ஜனாதிபதியின் இலக்குகள்

## ஜனாதிபதி செயலகப் பிரதிநிதி எம்.ஹைட்

(கொழும்பு)

**இலங்கையில் ஊழல்கள் அடாவடித்தனங்கள் அற்ற நல்லாட்சி ஒன்றை ஏற்படுத்த ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.**

**இதன் மூலம் நாட்டில அனைத்தினங்களது உரிகைள பாதுகாககப்படவேண்டும் என்பதுவே அவரது நோக்கமாகும்.**

**ஜனாதிபதி செயலகப் பிரதிநிதியும் அரசியல் ஆய்வாளரு மான எம்.ஹைட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நடாத்தப்பட்டு வரும் விடியும் வேளை நிகழ்ச்சித் தொடரில கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே ஹைட் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தேர்தலுக்கு முன்பு மக்களுக்கு உறுதியளித்ததன் பிரகாரம் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தவே ஜனாதிபதி முனைகிறார்.

இதன் மூலம் நாட்டில் நீண்ட காலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கஞ்க்குத் தீர்வுகாணலாம் என்பது அவருடைய எதிர்பார்ப்பு.

இந்த நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக பிரதமர், அமைச்சர்கள், ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்து ஆலோசித்து வருகின்றார்.

இதன் போது கடந்தகால ஆட்சிகளில் இடம்பெற்ற தவறுகளை இனங்கண்டு அவற்றை நிவிர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

ஏனெனில் கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தாம் தேர்தலுக்கு முன்வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளன. அத்துடன் அரசாங்கத்தின் அமைப்பு முறைகளில உள்ள குறைபாடுகளை இனங்கண்டு தீர்த்துவைக்க தவறிவிட்டன.

இதனால் மக்களுக்கும் அவ் அரசாங்கங்களுக்கும் இடையே புரிந்துணர்வு இல்லாது போய்விட்டது.

இது மக்கள் மத்தியில் விசனத்தையும் அதிருப்தியையும் உருவாக்கியுள்ளது. இவையே நாட்டில் குழப்பங்களும் போராட்டங்களும் தோன்றுவதற்கு வழிசமைத்தன.

இவ்வாறான குறைபாடுகளைக் களைந்து மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த பெரும்பான்மைக் கட்சிகள் தாம் பதவியில் இருக்க வேணீடும் என்பதற்காக குழறுபடிகளில் ஈடுபடடனவே தவிர, மக்களை வழிப்படுத்தும் நல்லாட்சியை ஏற்படுத்தவோ அன்றி தேர்தலுக்கு முன்பு தாம் வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றவோ முன்வரவில்லை.

மாறாகத் தமது அதிகாரப பலஙகளை சுயலாபங்களுக்காகப் பயனபடுத்தினர். இதனால் நாடு முன்னேற முடியாத நிலைக்குப் போய்விட்டது.

அதாவது அன்று பதவிக்கு வந்வர்கள் தமது ஆட்சியைத் தகக வைக்கும் குறுகிய நோக்குடன் யாப்புகளையும், அரசியல் அமைப்புச் சட்டங்களையும் மாற்றி மாற்றி அமைத்தனரே தவிர, அனைத்து இனங்களும் சமஉரிமையுடனும் சமத்துவத்துடனும் வாழக்கூடிய எந்தவொரு செயலையும் செய்யவில்லை.

அத்துடன் சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் என்ற ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும் விதத்தில் தமது அரசியலைப் பக்கச் சார்புடன் நடத்திக் கொண்டனர். இதுவே காலப் போக்கில் இனப்பிரச்சினையாகவும் பின் அதுபோராட்டங் ளாகவும் வடிவெடுத்தன. இவற்றால் நாட்டின் அபிவிருத்தி பாதாளம் நோக்கிச் செல்லக்கூடிய அபாயம் தோன்றியது.

இவ்வாறான பிரச்சினைகள்ள மேலும் உருவெடுக்க விடாது தடுப்பதற்கு நாட்டில் உடனடியாகவே நல்லாட்சி நிலவவேண்டும். இதற்கு நாட்டில் வாழும் மூன்று இனங்களும சமத்துவத்துடனும் சம உரிமைகளுடனும் வாழும் நிலை உருவாக்கப்படல் வேண்டும்.

இந்நல்லாட்சிக்குரிய திட்டங்கள் யாவும் கடந்த காலத்தில் நாம பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டே வகுக்கப்படுதல் வேண்டும். இல்லாவிட்டால் முன்பு இடம்பெற்ற வரலாற்றுத் தவறுகள் மீண்டும் ஏற்பட வாய்ப்பு உருவாகிவிடும்.

எனவே நாட்டு மககளை சகல விதங்களிலும் பாதுகாக்கவேண்டிய கட்டமைப்புக்களுடன் நல்லாட்சிக கட்டமைப்பு உருவாக்கப்படல் வேண்டும்.

இவற்றின் மூலம் சகல மக்களது பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டு அவர்களது அபிலாசைகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.

இவற்றைக் கருத்தில்கொண்டு தான் இன்றிருப்போர் அனுபவித்த துன்ப துயரங்களை எதிர்கால சநததி அனுபவிக்கக்கூடாது என்பதற்காக நாட்டில் ஓர் நல்லாட்சியை நிலைநிறுத்த ஜனாதிபதி முக்கிய கவனம் செலுத்தி வருகிறார்.

இதன முதற்கட்டமாக நல்லாட்சியாளர்களுக்காக அவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்காற்றுக் கோவையை அமைத்துள்ளார்.

இதன் மூலம் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே ஒற்றுமையும் சமத்துவமும் பேணப்படும் என்பது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு. நாட்டில நிலவும் உரிமை மீறல்கள், அடாவடித்தனங்கள் என்பவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். ஊழல் அற்ற அரசாங்கம் உருவாகுவதன் மூலம் நாடு அபிவிருத்தியடையும். இதனைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதியின திட்டங்கள் அமைந்துள்ளன.

இதறகு நாட்டின் அனைத்து இனங்களும் அரசியல்வாதிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அப்பொழுதுதான் ஜனாதிபதியின் திடடப்படி நாடு நல்லதொரு அபிவிருத்தியை எட்டுமெனத் தெரிவித்தார்.

(உ-4)

## பாதுகாப்புப் படையினரின் பொறுப்புணர்வுக்குப் பாராட்டு

(பலாலி)

முகமாலை சோதனை நிலையத்தில் கண்டெடுத்த பணம் மற்றும் பெறுமதிமிக்க ஆவணங்களை உரியவரிடம் ஒப்படைத்த பொலிஸ் உத்தியோகத்தர் கொஸ்தாபல் அனுர மற்றும் இராணுவத்தின் முதலாவது சிங்க றெஜிமெண்ட் படைப பிரிவைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் செனவிரெத்ன ஆகியோரின் நாணயத்தை பலரும் பாராட்டியுள்ளனர்.

இதுபற்றிப பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில,

2004.04.25ஆம் திகதி முகமாலை சோதனை நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கொஸதாபல் அனுர மற்றும் இராணுவத்தில் முதலாவது சிங்க றெஜிமெண்ட் படைப்பிரிவைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் செனவிரெத்ன ஆகிய இருவரும் சோதனை நிலையத்தில் இருந்து கண்டெடுத்த பணம மற்றும் பெறுமதிமிக்க ஆவணங்களையும் அதன் உரிமையாளரான யாழ்பபாணத்தில் ஸ்டான்லி வீதியைப் வசிப்பிடமாகக்கொண்ட சிவாகரன் என்பவரிடம் ஒப்படைத்துள்ளார்கள. 7ஆயிரத்து 900 ரூபா பணம் முக்கிய ஆவணங்கள், கிரடிற் காட் போன்றவையே இவ்வாறு கையளிக்கப்பட்டன.

இந்தப் பணத்தையும், ஆவணங்களையும் பெற்றுக்கொண்ட உரிமையாளர் பெரும் மகிழ்சியடைந்து இராணுவ சிப்பாய் மற்றும் பொலிஸ் கொஸ்தாபல் ஆகிய இருவருக்கும நன்றி தெரிவித்துள்ளார். முகமாலை சோதனை நிலையத்தில் நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் பயணம் செய்யும் சூழ்நிலையில் பொறுப்புடனும் உண்மையுடனும் பணிபுரிந்த இராணுவ சிப்பாயினதும், பொலிஸாரினதும் சேவையை சேனைபதக் களபதியும் பாராட்டியுள்ளார்.

இதற்கு முன்பும் இவ்வாறு பல தடவைகள் பயணிகள் கைவிட்டுச் சென்ற பெறுமதிமிக்க பொருட்கள் மீட்கப்பட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன, தமது கடமையின் பொறுப்புணர்வையும், தமது சீருடையின் கௌரவத்தையும் வெளிககாட்டும் வகையில் இந்த இராணுவீரரும், பொலிஸ் கொஸ்தாபலும் செயற்பட்டமை மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே நல்லுறவைக் கட்டியெழுப்ப உதவியாக அமையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொலிஸ் பதவி உயர்வுகளை நடைமுறைப்படுத்த உத்தரவு

(கொழும்பு)

நீண்டகாலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளுக்கான பதவி உயர்வுகளை உடனடியாக அமுலுகது வரும்வகையில் நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளர்.

இது தொடர்பாக மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும சமாதான விவகாரம் தொடர்பான அமைச்சுக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

மக்கள் பாதுகாப்புச் சட்ட அமைச்சின் செயலர் திலக் ரணவீர, பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா மறறும்சிரேஷ்ட பொல்ஸ்மா அதிபருடன நடத்திய கலந்துரையாடலை அடுத்தே ஜனாதிபதி இந்த உத்தரவைப பிறப்பித்துள்ளார்

ஜனாதிபதியின் இவ் உத்தரவுக்கு அமைய பொலிஸ் கான்ஸ்டபிள், சாஜன், உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் பரிசோதகர் ஆகிய பதவிகளில் இருப்போருக்கு இப பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக தலைமைப பொலிஸ் பரிசோதகர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகிய பதவிகளில் உள்ளவர்களுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

(தி-121)

## குற்றச்செயல்கள் வவுனியாவில் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் அண்மைக் காலங்களாக குறைந்திருந்த திருட்டு மற்றும் சட்டவிரோத மது விற்பனைச் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா தோணிக்கல் பகுதியிலுள்ள ஆலயமொன்றில் இருந்த உண்டியல்களை உடைத்த சில திருடர்கள் அதிலிருந்த 20 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துள்ளார்கள் என்றும்,

வவுனியா பூமாங்குளம் பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும் இத்தகைய சட்டவிரோத மதுபான உற்பத்தியில ஈடுபட்ட 13 நபர்களை தாம் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-64,10)

## மக்கள் பங்களிப்புடனான கிராம மதிப்பீட்டுச் செயன்முறை

(வவுனியா)

வவுனியா டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன், வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டத்தின் சேமமடு படிவம் 2ல் முதலாம் கட்ட வேலை பூர்த்தியடைந்துள்ளது.

இரண்டாம் கட்ட வேலைகளுக்கான தேவைகளை மக்களிடம் இருந்து அறிந்துகொள்வதற்காக மக்கள் பங்கேற்புடனான கிராம மதிப்பீட்டுச் செயன்முறை அண்மையில் சேமமடு படிவம் 2ல் கிறிஸ்தவ தேவாலயத்தில் முழு நாளாக நடைபெற்றது.

இதில 60க்கும் அதிகமான பொது மக்கள் கலந்துகொண்டதுடன்,தங்களுக்குத் தேவையான செயறபாடுகளை முன்னுரிமை அடிப்படையில் சுட்டிக்காட்டினர்.

மதிப்பீட்டு நிகழ்வின் போது வவுனியா மாவட்ட டெனிஸ் அகதிகள் பேரவையின் பிரதிநிதிகள், வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக கிட இணைப்பாளர் த.தயானந்தன், வெளிக்களப் பணியாளர்கள், அப்பகுதி பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மதிபபீட்டில் இருந்து இரண்டாம் கட்ட வேலைக்குத் தெரிவுசெய்யப்பட்ட செயற்பாடுகளாக வீதி திருததம், குடிநீர் வசதி ஏற்படுத்தல், சுழற்சி முறைக் கடன்வசதி வழங்கல், முன்பள்ளிகளை அமைத்தல் போன்ற தேவைகள் இனங்காணப்பட்டன. இதனை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. (உ)

## ஈஸ்வரம்மா தினவிழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "ஈஸ்வரம்மா தின விழாவும், வெசாக் போயா தின நிகழ்வும்" எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5மணிக்கு சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(உ-18)

## மே நாளில் அணித்திரள்க!

## விவசாய நுகர்ச்சி கூ.ச. சமாசத் தலைவர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மே நாளன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் மே நாள் நிகழ்விற்கு இயக்குநர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள், மக்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

உழைக்கும் வர்க்கத்தின உன்னத நாளாகிய மே நாளை சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குதலில் நின்றும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான பயணிப்பை வலுப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு நாளாக உழைக்கும் வர்க்கத்தினர் முன்னெடுத்துள்ளார்கள்.

எமது அர்ப்பணிப்பு நிறைந்த விடுதலைப்பயணத்தில் எத்தனையோ இடர்கள் சூழ்ந்த போதிலும் நாம் வீறு கொண்டெழுந்தோம். இன்னும் எழுவோம் என்பதனை மெய்யாக்கும் வகையில் எமது இன எழுச்சியை மே நாளன்று உலகிற்குப் பறைசாற்றுவோம் என்றுள்ளது.

(உ)

# நகுலேஸ்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம் ஓர் அறிமுகம்

**அண்மையில் அமரரான திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம் அவர்களின் நினைவாக உருவாக்கப்படும் நகுலேஸ்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம் தொடர்பான எண்ணக் கருவாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

மேம்பாடு என்பது, ஒரு சமூகம் அவாவி நிற்கும் இலக்கினை நோக்கிய பொருள்சார்-பொருள்சாராக் கூறுகளை உள்ளடக்கிய சமூக முழுமையின் மேல் நோக்கிய அசைவு என்றாகின்றது. இவ்வாறானதொரு கருத்தியல் பின்னணியிலேயே மேம்பாட்டில் பண்பாட்டின் இடம் பற்றிய கவனம் இன்று அதிகரித்துள்ளது. சமூக ஒழுங்கு, பொருளாதார விரு

களை எய்தும் வகையில் பண்பாட்டுக் கொள்கை வகுக்கப்பட வேண்டும். சுயபண்பாட்டு எழுச்சியும் வளர்ச்சியுமே இங்கு உச்ச இலக்குகளாகும். நவீன வாழ்வின் மாற்றங்களிடை சுயத்தைக்

மாக்க அலைகளிடை தொலைந்து போன சுயங்களை மீளமைதல் வரை பண்பாட்டு பணிகள் எங்களைக் காத்திருக்கின்றன.

மேம்பாடு என்றாலே அது மேலைமயமாக்கம் தான் என்ற மயக்கம் கலைந்தாக வேண்டும். மரபு வழிப் பண்பாட்டின் செழுமையான - அனுபவங்கள் பற்றிய மறதிக்குரிய மருந்தினை உடன் கண்டாக வேண்டும். கடந்த காலம் பற்றிய உணர்வை இழத்தலின் ஆபத்து இன்றைய வாழ்வின் அனைத்து முகங்களிலும் உணரப்படுகின்றது.

நவீனத்தை மரபின் எதிரியாக்கி அதனையே மேம்பாட்டின் சாரமாகியதில் நாம் இழந்த

யும் போது இந்த இணைவும் இசைவும் கைவசமாகும்.

பண்பாட்டுப் புத்தாக்கம் என்ற கனவு மெய்ப்படப் பணபாடு தொடர்பான விழிப்புணர்வு அடிப்படையாகின்றது. இந்தப் பணபாட்டு விழிப்புணர்வை விதைப்பதில் சமூக உணர்வுகொண்ட அனைத்துப் பிரிவினரினதும் ஒன்றிணைதல் இன்றியமையாததாகின்றது. கவிஞர்கள், கலைஞர்கள், சமூக சிந்தனையாளர்கள், சமூக பண்பாட்டு இயக்கமாக இந்த ஒன்றிப்பு முகிழ்தலும் அவ்சியமானதாகின்றது.

மீட்கும், புதுக்கும் இந்தப் பணியை இனியும் தாமதமின்றி தீவிரப்படுத்த வேண்டும்.

காலம் தாழ்த்தியதில் கரைந்துபோன பண்பாடுகளின் அனுபவங்கள் இந்த வகையில் எங்களுக்கான எச்சரிக்கைகளாகலாம். அதேவேளைகளில் சுய விழிப்புடன் உயிர்ப்புடன் பண்பாட்டு மறுமலர்ச்சி வழிமேம்பட்ட சமூக அனுபவங்கள் வழிகாட்டிகளாகலாம்.

நாங்கள் என்ன செய்யப் போகிறோம்...

தனித்தும் கூட்டாகவும் சாதக




வைகள் தான் அதிகமெனலாம்.

விண்ணைத்தொடும் அறிவு வந்தது உண்மை; மண்ணுள் மனிதம் புதையும் நிலைக்கு அது துணையாகி விடக்கூடாது. தொழில நுட்பத்தின் உச்சம் மனித உயிர்களின அழிவில் முடிதல் கூடாது. அறிவு அநீதிகளின் காவலன் ஆகிவிடக் கூடாது.

உண்மையில் மரபும் நவீனத்துவமும் மனித சமூக மேம்பாடடில் கைகோர்த்து நடைபோட

அநீதியான மேலாண்மைகளை கேள்விக்குள்ளாக்கும், அழகான நற்பண்புகளை நிலைபேறாக்கும் பண்பாட்டு இயக்கமே மேம்பாடு தொடர்பான பண்பாட்டுக் கொள்கைகளின் செயல் முகவரெனலாம்.

குடும்பம்- சாதி- சமயம் - அறிவியல் அமைப்பு என அனைத்துப் புலன்களிலும் பண்பாட்டு இயக்

மான பதிலை எழுதும் சமூகப் பொறுப்பு எங்கள் ஒவ்வொருவருக்கும் உரியதாகின்றது.

இந்த வகையில் என் ஒரு நீண்ட காலத்துக் கனவு, இந்தக்

**பேராசிரியர்**
**என்.சண்முகலிங்கன்**

கனவை எனக்குள் விதைத்த என் அம்மாவின் பெயரில் இன்று வடிவம் பெறும்.

த்தி, வெளிவிவகாரம், தேசிய பாதுகாப்பு என்கின்ற குவியங்களைத் தாண்டி, பண்பாட்டுக் கொள்கை(**Cultural Policy**) பற்றி இன்றைய அரசுகள் அக்கறை கொள்வது இந்த சிந்தனை விழிப்பின் தடத்தில் தான்.

நவீன வாழ்வில் ஒரு தேசத்து மக்களின் அபிலாஷை

காணும், பேணும் இந்தப் பண்பாட்டுக கொள்கையின் இன்றியமையாமை எனது புலங்களில் பெரிதும் உணரப்படுவது, குடியேற்ற நாட்டாதிக்க கால செல்வாக்கினுள் முடமாகிப்போன சுதேச அடையாளங்களை மீட்டெடுத்தலிலிருந்து இன்றைய நவகுடியேற்றவாத உலகமய

வேண்டும். இந்தப் பயணத்தில் மரபின் தேவையற்ற கூறுகளைத் தவிர்ப்பதும், அநீதியான பகுதிகளை அகற்றுதலும் இயல்பாய் இணைதல் வேண்டும்.

பண்பாட்டின் புத்தாக்கம் என்பது பண்பாட்டுக் கொள்கையின் ஆதார சுருதியாய் அமை

கங்களின் அறிவும், அனுபவமும் பயன்காண வேண்டும்.

நவீன வாழ்வின் உலகமயமாக்க அலைகளில், நுகர்வு கலாசார நுரைகளில் துரும்பாகி அலையும் சுதேச பண்பாடுகளை

பண்பாட்டு மேம்பாட்டுக்கென திட்ட மிட்ட செயற்பாடுகளை சமூக அணித்திரட்டலை வழிப்படுத்தும் களமாக இந்நிறுவனம் எதிர்காலத்து எங்கள் தேசத்துப் பண்பாட்டினை வளம்படுத்தும். எங்கள் செயற்திட்டங்கள் பற்றிய அறிவிப்பு விரைவில் உங்களைச் சேரும்.

---

# எவரும் பிக்குகளுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் செயற்படக் கூடாது

## பிரதமர் ராஜபக்ஷ எச்சரிக்கை

(கொழும்பு)

பிக்குமார்கள் எந்த வகையான கொள்கையைக் கொணடிருந்தாலும் அவர்களுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் எவரும் செயற்படக் கூடாது என்பதுடன் அவ்வாறான அபகீர்த்திகளை ஏற்படுத்த எவருக்கும் இடமளிக்கக்கூடாது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு மாத்தறை பாஸ்துவ பௌத்த விகாரை ஒன்றில் நடை பெற்ற வரவேற்பு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர்



இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், பௌத்த குருமார்கள் கடந்த 2500 வருடங்களாக இலங்கையில் பௌத்தத்தை நிலை நிறுத்தப்பாடுபட்டனர்.

சிங்களவர் மத்தியில் எவ்விதமான வேறுபாடுகள் இருந்தாலும், பௌத்த மத குருமார்கள் நிந்திக்கப்படுவதற்கு இடமளிககக் கூடாது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைப்பதற்கு, ஜாதிக ஹெல உறுமயின் ஆதரவு தேவை என உணரப்பட்டது உண்மையே.

ஆனால், அதற்கு அவர்கள் ஒத்துழைக்கவில்லை, என்பதற்காக பௌத்த தேரர்கள் அடங்கிய கட்சியை நாங்கள் ஒரு போதும் குறைபட்டது கிடையாது.

ஆனால், சில அரசியல்வாதிகள் பௌத்த குருமார்கள் அரசியலில் ஈடுபட்டதைக் காரணம் காட்டி, அவர்களை நிந்தித்து வருகின்றனர் என்றார். (தி-63,121)

---

# பகிஷ்கரிப்பைக் கைவிட்டு விரிவுரைகளுக்கு சமுகமளிக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கல்வி டிப்ளோமா முழுநேர மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டு இன்றுமுதல் விரிவுரைகளுக்கு சமுகமளிக்க முடிவு செய்துள்ளனர்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா முழுநேர மாணவர்கள் தமது விரிவுரைகளை கடந்த இரண்டு தினங்களாக பகிஷ்கரித்து வந்தனர்.

கல்வியியல்துறை மாணவர்களுக்கென நிரந்தரமான விரிவுரை மண்டபம் ஒன்று இல்லாமையால் தமது விரிவுரைகள் அடிக்கடி பாதிக்கப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவித்தும் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யுமாறும் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையைக் கண்டித்து இப்பகிஷ்கரிப்பில் அவர்கள் அமைதியான முறையில் ஈடுபட்டதோடு துணைவேந்தருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தனர்.

மாணவர்களது பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து துணைவேந்தர் உடனடியாக அவர்களை அழைத்துக் கலந்துரையாடி நிரந்தர விரிவுரை மண்டபம் ஒன்றை மிகவிரைவாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்து தருவதாகவும் உடனடியாக விரிவுரைகள் பாதிக்கப்படாமல் தொடர்ந்து நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்து தருவதாகவும் மாணவர்களிடம் உறுதி வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பை முடித்து 30.04.2004 தொடக்கம் விரிவுரைகளுக்கு சமுகம் அளிக்க முடிவு செய்துள்ளனர்.

(உ)

---


**எதிராளிக்கு அழைப்புக் கட்டளை**

**இல. 16 பிரிவு 55 (1)**

மாவட்ட நீதிமன்றத்தில்

ஹென்றி போல்றாம்சே
இலக்கம 466/7C
முதலாம் ஒழுங்கை,
கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

வழக்கு இலக்கம்
மணநீக்கம் 444 — எதிராக

ஹென்றி போல்றாம்சே
பெண் மேரி ஜாக்குலின்
குளமங்கால்,
மல்லாகம்.

திகதி:

மேற்சொல்லப்பட்ட எதிராளிக்கு,

மேல் சொல்லப்பட்ட வழக்காளிகள் இந்நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளார்கள். ஆதலினால் இதனோடு இணைக்கப்படும் பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2004ஆம் ஆண்டு மாதம் 5, 20ஆம் திகதி கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லபப்பட்ட திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் இவ்வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படும் என அறிந்து கொள்ளுமாறு இத்தால் தேவைபபடுத்தப்படுகின்றீர். பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களையும் சேர்க்கக்கூடிய முகவரி ஒன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடும் படி நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

தயாரித்தது:
வழக்காளிகளின் பதிவு பெற்ற சட்டத்தரணி
(பா.தவபாலன்)

நீதிமன்றக் கட்டளைப்படி
ச.வன்னியசிங்கன்
பதில் பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: விளக்கத் திகதியை நிர்ணயிப்பதற்காகப் பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரி ஒன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்து உதவுமாறு பதிவஞ்சல் மூலம் அனுப்புவதற்காகும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் எண்பதாம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2004ஆம் ஆண்டு சித்திரை மாதம் 26ஆம் நாள்.

ச.வன்னியசிங்கன்
பதில் பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(8374)

# இன்று ஒரு தகவல்

## நல்ல பண்புகள்

ஒரு நண்பர் வந்தார். “நல்ல பண்புகள் என்று சொல்கின்றார்களே அப்படியென்றால் என்ன?” என்று கேட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. “இதுகூடத் தெரிந்துகொள்ளாமல் இருக்கின்றாரே” என்று நினைத்தேன். அதனால்தான் அவர் எனக்கு நண்பராக வந்து சேர்ந்திருக்கிறார் என்று தோன்றியது.

அதன்பின் நான் அவரை உட்காரவைத்து பேசிக் கொண்டிருந்தேன். எவையெல்லாம் நல்ல பண்புகள் என்பதைப் பற்றி நபிகள்நாயகம் சொல்லியிருக்கிறார். அவர் நமக்குக் கூறியிருக்கும் நல்ல பண்புகள் என்னென்ன தெரியுமா? ஒற்றுமையுடன் இருப்பது. நல்ல காரியங்கள் செய்வது, தர்மம் செய்வது, சலாம் சொல்ல முந்திக் கொள்வது, நோயாளிகளைக் காண்பது, நல்லவரா கெட்டவரா என்று பாராமல் பிரேத ஊர்வலத்தில் கலந்து கொள்வது.

முஸ்லிமா முஸ்லிம் அல்லாதவரா என்று பாராமல் அயலவருடன் அன்பாக நடந்துகொள்வது. முதியோருக்கு மரியாதை செய்வது. மன்னிப்பது. சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது. கோபத்தை அடக்குவது. விலக்கப்பட்டதைத் தவிர்ப்பது. உறவினர்களிடம் அன்பாக நடந்து கொள்வது. கர்வம் கொள்ளாமல் இருப்பது.

இவையெல்லாம் நற்பண்புகள் என்று நபிகள்நாயகம் சொல்லியிருக்கிறார். இந்தப் பண்புகள் எல்லா மனிதர்களுக்கும் இருந்துவிட்டதென்றால் நாம் கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை. ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை ஒரு பண்பாகவே வளர்த்துக் கொள்வோமானால் நீ வேறு நான் வேறு என்ற நினைப்பே வராது.

நல்ல காரியங்களையே செய்ய வேண்டும். தீய காரியங்களை செய்யக் கூடாது. தர்மம் செய்ய வேண்டும். அது ஒரு கடமை. எதிரில் ஒருவரைப் பார்க்கிறோம். அவர் சொல்வதற்கு முன்பே நாம் முந்திக் கொண்டு அவருக்கு சலாம் சொல்ல வேண்டும். அது சிறந்த பண்பு.

ஒருவர் உடல்நிலை சீரில்லாமல் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே அவரைச் சென்று பார்க்க வேண்டும். அது ஒரு பண்பு. ஒரு பிரேத ஊர்வலம் செல்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். செத்துப் போனவர் நல்லவரா கெட்டவரா என்று பார்த்துக் கொண்டிருக்காமல் அந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளவேண்டும். அதுதான் சிறந்த பண்பு. அந்த ஆள் நமக்கு வேண்டாதவர். நாம் எதற்குப் போக வேணடும் என்று நினைக்கக் கூடாது.

முஸ்லிமா முஸ்லிம் அல்லாதவரா என்று பார்க்காமல் அயலாரிடம் அன்பாக நடந்துகொள்ளவேண்டும். அது ஒரு நற்பண்பு என்கிறார் நபிகள்நாயகம். வயதானவர்களை அலட்சியப்படுத்தக்கூடாது. அவர்களுக்கு மரியாதை கொடுக்கவேண்டும். அவர்களிடம் பணிவாக நடக்க வேண்டும. அவர்களை மதிக்க வேண்டும்.

மனனிப்பது மிகப் பெரிய விஷயம். மனிதனுக்கு அந்தப் பண்பு மிகவும் முக்கியம். சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது சிறந்த குணம். கோபப்படக்கூடாது. கோபத்தை அடக்க வேண்டும். வேண்டாத விஷயங்களை விட்டுவிட வேண்டும். அதாவது விலக்கப்பட்டதையெல்லாம் தவிர்க்கவேண்டும். உறவினர்களிடம் அன்பாக நடந்துகொள்ளவேண்டும். எந்த நிலையிலும் கர்வம் கொள்ளக்கூடாது. இவை யாவும் நற்பண்புகள் என நபிகள்நாயகம் அடையாளம் காட்டியுள்ளார்.

நர்மெல்லாம் அதைப் புரிந்துகொண்டு நடந்தால் இந்த உலகில் நல்லவிதமாக வாழலாம். புரிந்து கொள்ளாவிட்டால் கஷ்டம்தான் உதாரணமாக சண்டை சச்சரவுகளை தீர்த்து வைப்பது ஒரு நல்ல பண்பென்று இப்போது பேசிக்கொண்டோம். ஆனால் இன்றைய நிலைமை எப்படி இருக்கிறதென்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஒரு நடுத்தெருவில் அடிதடி சண்டை நடக்கிறது. சுற்றிக் கூட்டம். அந்தக் கூட்டத்திலிருந்து ஒரு ஆள் தப்பி வெளியில் வந்தான். அவனது உடைகள் கிழிந்து தொங்கின. வசமாக அடி வாங்கியிருப்பான் போல் தெரிந்தது. நான் அவனைக் கூப்பிட்டுப் புத்திமதி கூறினேன். ஏனப்பா இப்படி சண்டை போடுகிறீர்கள். சமாதானமாகப் போங்கள் அதுதான் நல்லது என்றேன். சும்மா போங்கள் நான் சண்டை பிடிக்கவில்லை. அதைத் தீர்த்து வைக்கப் போனேன். அதுதான் இப்படி ஆகிவிட்டேன் என்று கூறிவிட்டு அங்கிருந்து வேகமாக நடந்து சென்றான்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# பேச்சு மேசைக்கு இந்தியாவை இழுக்க பகீரதப் பிரயத்தனம்

## கதிர்காமர் இந்தியா சென்றதும் இதற்காகவே

(கொழும்பு)



தொடரவிருக்கும் பேச்சு வார்த்தைகளை மத்தியஸ்தம் செய்ய வருமாறு நோர்வேக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பி. உட்பட இனவாதக் கட்சிகளை அமைதிப்படுத்த இந்தியாவுக்கும் அதேபோன்றதோர் அழைப்பை விடுத் துள்ளதாக இரகசியத் தகவல்கள் கசிந்துள்ளன.

குறிப்பாக ஆளும் கட்சியில் அங்கத்துவம் வகிக்கும் ஜே.வி.பி. கட்சியுடன் ஏற்கனவே பலவித இழுபறிகளும் கருத்துமோதல்களும் எழுந்துள்ள நிலையில், இந்தியாவின் பங்களிப்பை வலியுறுத்தி வரும் ஜே.வி.பி.யை திருப்திப்படுத்தும் நோக்கிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துக் கூறியுள்ளார்.

டில்லிக்குப் பயணமாகியுள்ள கதிர்காமர், இந்தியாவை சமாதான நடவடிக்கைகளில் குறைந்தது ‘பார்வையாளர்’ என்ற அந்தஸ்திலாவது கலந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதாக மேலும் தெரியவருகிறது.

(உ)

# மீனவர் பிரச்சினை குறித்து ஆராய்வதற்கு எம்.பிக்கள் உள்ளிட்ட குழு இந்தியா செல்லும்

## மன்னார் கூட்டத்தில் தீர்மானம்

(வவுனியா)

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் மன்னார் மீனவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.விஸ்வலிங்கம், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், வினோ நோகராதலிங்கம், மாவட்டப் பிரதேச செயலாளர்கள், மீனவர் சமாசப் பிரதிநிதிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இவ் உயர்மட்ட மாநாட்டில் மீனவர்கள் எதிர்நோககும் பிரச்சினைகள் உட்பட 30 விடயங்கள் ஆராயப்பட்டன.

கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று இந்தியாவுக்குச் சென்று மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் நேரில் பேசி தீர்வு காண்பது எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(த-13)

# இராசி பலன்

**30.04.2004**

**(சித்திரை 18, வெள்ளிக்கிழமை)**
**தசமி முற்பகல்-8.57 வரை**
**பூரம் பின்னிரவு 3.58 வரை**
**இராகுகாலம் 10.27-11.57 வரை**
**சுபநேரம் 5.58-7.28 வரை**

**மேடம்**
சொத்துப் பிணக்கு, காரிய தாமதம், உறவினர் சந்திப்பு தொழில் சிந்தை.

**இடபம்**
மனச் சஞ்சலம், புதிய விடயம், மாதா சுகம், கருமங்கள் தாமதமாகும்.

**மிதுனம்**
அன்னியர் சந்திப்பு, செய்தொழில் முன்னேற்றம், உறவினர் உதவி, வாகன சுகம்.

**கடகம்**
வாக்கு மேன்மை, குடும்ப நலம், உணர்ச்சி வசப்படுதல், தனவிரயம்.

**சிங்கம்**
ஜனவசியம், புதிய தொழிற்பாடு, தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும்.

**கன்னி**
பிரயாணம், நித்திரைக் குறைவு, காரிய தாமதம், பெரியோர் வெறுப்பு.

**துலாம்**
பாராட்டு, பிறர் உதவி, தொழில் வருமானம், தெய்வ தரிசனம்.

**விருச்சிகம்**
தூரதேசச் செய்தி, அதிகாரம், தொழில் சிந்தை உற்சாகம்.

**தனுசு**
புதிய திட்டமிடல், இடமாற்றம், உறவினர் வழி உதவி, அதிக பிரயாசை.

**மகரம்**
பிரயாண பயம், உறவினர் வெறுப்பு, பணத் தட்டுப்பாடு, முயற்சி தடங்கல்.

**கும்பம்**
குடும்ப மகிழ்ச்சி, தொழில் சிறப்பு, தெய்வ தரிசனம், நல்ல வரவேற்பு.

**மீனம்**
சுவாரஸ்யம், சுப நிகழ்ச்சி, தொழில் நன்மை, முயற்சி கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

# தொடர்புகொள்ளக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிட்ட நபர்களை அருகில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

★ அருளமபலம் கனகநாயகம் - பழைய உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை.

★ ச.மனோகரன் - காளிகோவிலடி இடைக்காடு, வளலாய்.

★ யேசுதாசன் பிரான்சிஸ்கா - கைதடி கிழக்கு, நாவற்குழி.

★ பூபாலசிங்கம் சரஸ்வதி - 8ஆம் கட்டை துர்க்கை அம்மன் கோவிலடி, தெல்லிப்பழை.

★ நடராசா கனகலிங்கம் - கேணியடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு.

★ சதாசிவம் சிவகுருநாதன் - அம்மன் வீதி, திருநெல்வேலி.

★ சுரேஸ்குமார் சிவமாலினி - விளையாட்டுத் திடல் வீதி, கல்வியங்காடு.

★ கந்தசாமி சற்குணேஸ்வரி - கோகிலாக்கண்டி மத்தி, நாவற்குழி.

★ இரத்தினம் கந்தசாமி - கதிர்காமக் கோவிலடி, நீர்வேலி வடக்கு.

★ இரத்தினம் அன்னபூரணம் - ஞானவைரவர் கோவிலடி, நுணாவில்.

★ தேவராசா ராஜேஸ்வரி - அம்மன் கோவிலடி, மானிப்பாய் மேற்கு.

★ செபமாலை டேவிட் - வட்டாரம் 2, அல்லைப்பிட்டி.

★ வேலுப்பிள்ளை ரத்தினசிங்கம் - செட்டித் தெரு, பருத்தித்துறை.

★ பொன்னுத்துரை நாகேஸ்வரி - மே/பா ப. சிவானந்தன் - 10ஆம் கட்டை, புத்தூர் கிழக்கு.

★ பாலசுப்பிரமணியம் ஈஸ்வரி - மே/பா ப. சிவானந்தன் - 10ஆம் கட்டை, புத்தூர் கிழக்கு.

★ தேவகுலசிங்கம் கமலவதனா - அரசடி, தொண்டமனாறு.

★ அ.பரராஜசிங்கம் - வல்லை வீதி, அச்சுவேலி வடக்கு.

★ ஞானரத்தினம் ஜெயராணி - அட்வகேட் வீதி, வல்வெட்டித்துறை.

★ தம்பையா இளையதம்பி - பொற்பதி வீதி, கொக்குவில்.

★ நிக்கலஸ் அடைக்கலம் - 48/11 புனித மரியாள் வீதி (அல்லது) 29 1ஆம் குறுக்குத்தெரு, நாவாந்துறை.

★ ராசரத்தினம் சுகந்தமலர் - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.

★ கந்தசாமி சின்னத்தங்கச்சி - மே/பா சண்முகநாதன், வைரவர் கோவிலடி, நுணாவில்.

★ ராசரத்தினம் மனேன்மணி - இன்பருட்டி, அல்வாய் வடக்கு.

★ வேலாயுதம் புவனேஸ்வரி - முருகமூர்த்தி கோவிலடி, சாவகச்சேரி கிழக்கு.

★ ஜெயச்செல்வம் ராஜகலா - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.

★ சண்முகம் செல்லமுத்து - தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

(உ)

# தேர்தல் களம்-தொகுதி நிலவரம்



தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெண், தனது குழந்தைக்கு காங்கிரஸ் கொடியைஉடையாக அணிவித்திருந்த காட்சி

(தமிழ்நாடு)

கிருஷ்ணகிரி மக்களவைத் தொகுதியில் சுமார் 13 இலட்சத்து 60 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள்.

கிருஷ்ணகிரி,புதூர்,களி,பர்கூர், காவேரிப்பட்டினம், பாலக்காடு ஆகிய 6 சட்டப் பேரவைத் தொகுதிகளை உள்ளடக்கிய இத் தொகுதியில் ஆண வாக்காளர்கள் தொகை, பெண் வாக்காளர் தொகையை விட அதிகம்.

மாநிலத்தில் இது போன்று பெண் வாக்காளர்களை விட ஆண் வாக்காளர் அதிகம் உள்ள 4 தொகுதிகளில் இதுவுமொன்றாகும்.

தமிழத்தில் 30ஆவது மாவட்டமான கிருஷ்ணகிரி மாவட்டம் தர்மபுரி மாவட்டத்தில் இருந்து அண்மையில் உருவாக்கப்பட்டது.

இத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் சுகவனமும், அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர் நஞ்சை கௌடாவும வேறு 6 வேட்பாளர்களும் களத்தில் உள்ளனர்.

தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய 3 மொழி பேசும் மக்கள் கணிசமாக வாழும் இத்தொகுதி ஆந்திர,கர்நாடக எல்லையையொட்டி அமைந்துள்ளது.

சேலம் மாங்கனி இப்பகுதியில் இருந்துதான் உற்பத்தியாகிறது.

பெங்களூரின் முக்கிய பகுதியான புதூரில் ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளன.

ராசிபுரம் மக்களவைத் தனித் தொகுதியில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆத்தூர், தலைவாசல் தனித் தொகுதி,விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த சின்ன சேலம் ,மற்றும் நாமக்கல் மாவட்டதைச் சேர்ந்த ராசிபுரம், நாமகல்(தனி),சேந்தமங்கலம் ஆகிய 6 சட்டப் பேரவைத் தொகுதிகள் அடங்கும்.

இத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராமுலு, அ.இ.அ.தி.மு.கவைச் சேர்ந்த அன்பழகன் உட்பட 13 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். ராமுலு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்திருக்கிறார்.அன்பழகன் தாஜ்பூர் நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார்.

புகழ் பெற்ற ஆஞ்சநேயர் கோவில் அமைந்துள்ள நாமக்கல், கோழிமுட்டை உற்பத்தித் தொழிலிலும் லொறி போன்ற வாகனங்களின் கட்டமைப்புத் தொழிலிலும் பிரசித்தி பெற்றது.

நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செங்கோடு தொகுதியில் 14 இலட்சத்து 20 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள்.

இத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக முன்னாள் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் போட்டியிடுகிறார்.

அ.இ.அ.தி.மு.க. வேட்பாளராக இடைக்காடு பழனிசாமி போட்டியிடுகிறார்.இத் தொகுதியல் மக்களவை உறுப்பினராகவும் இடக்காடு சட்டப் பேரவை உறுப்பினராகவும் இவர் இருந்திருக்கிறார்.

மொத்தம் 14 வேட்பாளர்கள் களத்தில் உள்ள இம் மக்களவைத் தொகுதியில் ஈரோடு மாவட்டதைச் சேர்ந்த ஈரோடு,மொடக்குறுச்சி,நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செங்கோடு கபிலர் மலை.மற்றும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கந்தகிரி மற்றும் இடைக்காடு உள்ளிட்ட 6 சட்ட மன்றத் தொகுதிகள் இதில் அடங்கும். (து)

# ரஜனிகாந்த் புகார் குறித்து அறிக்கை அனுப்ப தமிழக அரசுக்கு ஆணையம் உத்தரவு

(புதுடில்லி)

நடிகர் ரஜனிகாந்த் அளித்த புகார் குறித்தும், மதுரையில் அவரது ரசிகர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் உடனடியாக அறிக்கை அனுப்புமாறு தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

டில்லியில் தலைமைத்தேர்தல் ஆணையர் டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தியை கடந்த திங்கட்கிழமை சந்தித்த ரஜினிகாந்த்,தேர்தலுக்கு முன்பும், பினபும் தனது ரசிகர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் மீது பா.ம.க.வின் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்றும் அதனால் அவர்களுக்குரிய பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அவரது புகாரின் மீது தேர்தல் ஆணையம் உடனடி நடவடிக்கை எடுத்துள்ளது. ரஜனி குறிப்பிட்டுள்ளதைப்போல எந்தெந்தத் தொகுதிகளில் அவரது ரசிகர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் அபாயம் உள்ளது என்பது தொடர்பாக விசாரணை நடத்தி உடனடியாக அறிக்கை அளிக்குமாறு தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு ஆணையம் கடந்த செவ்வாய்க் கிழமை உத்தரவிட்டது.அதேபோல் மதுரையல் ரஜனி ரசிகர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் அதுதொடர்பாக அரசு எடுத்த நடவடிக்கைகள தொடர்பாகவும் அறிக்கை அனுப்பவும் ஆணையிடப்பட்டுள்ளது.தமிழக அரசிடமிருந்து அறிக்கை பெற்ற பிறகு அதனடிப்படையில் ரஜனி ரசிகர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது தொடர்பாக தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பிக்கும் என்று தெரிகிறது. (து)

# வன்முறைக்குத் தூபம் போடுகிறார் ரஜனி

## பா.ம.க குற்றச்சாட்டு

(சென்னை)

பா.ம.க போட்டியிடும் 6 தொகுதிகளிலும் வன்முறைக்கு மறைமுகமாகத்தூபம் போடுகிறார் ரஜனிகாந் என்று பா.ம.க. புகார் கூறியுள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் மாநிலத் தலைவர் ஜி.கே. மணி கடந்த செவ்வாய்க்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டார்.

வாயில்லாத மக்களின் குரலை ஒலித்து வந்தது மட்டுமன்றி, அவர்களுக்காகப் பல்வேறு போராட்டங்களையும் நடத்திச் சிறை சென்ற பா.ம.க நிறுவநர் டாக்டர் ராமதாஸுக்கும் பா.ம.க.வுக்கும் வன்முறைச்சாயம் பூசி களங்கப்படுத்தும் முயற்சி முடுக்கிவிடப்பட்டு வந்திருக்கிறது. இந்த அவதூறுப் பிரசாரம் மக்கள் சக்திக்கு முன்னால் தவிடு பொடியானது என்பதே வரலாறு என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பா.ம.க.வைக் களங்கப்படுத்தும் முயற்சியில் தோற்றுப்போன சக்திகள் விட்டுச்சென்ற இடத்திலிருந்து இப்போது புதிதாகச் சிலர் புறப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் நண்பர் ரஜனியும் ஒருவர்.

பாபா படம் தோல்வி அடைந்ததற்கும் பா.ம.கவுக்கும் என்ன சம்பந்தம்? இதற்கும்தேர்தலுக்கும் என்ன சம்பந்தம்?

டில்லியில் 3 நாள் தங்கியிருந்து தேர்தல் ஆணையரிடம் ரஜனி புகாமனு அளித்திருக்கிறார். 67 கோடி பேர் வாககளிக்கும் உலகின் மிகப்பெரிய தேர்தலை நடத்துகிற பொறுப்பிலுள்ள தலைமைத் தேர்தல் ஆணையர் 5 நிமிடநேரம் ஒதுக்கி அவரைச் சந்தித் திருக்கிறார் என்பதைத் தவிர புகாரில் சத்து ஏதுமில்லை. ரஜனி தெரிவித்துள்ள ஆதாரமற்ற சந்தேகங்களையும், கற்பனைக் கதைகளையும் பா.ம.க சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

வன்முறைக்குத் தூபம் போடுகிறவர்கள் யார்? தூண்டி விடுபவர்கள் யார்? காவிரி நீருக்காக நெய்வேலியில் போராட்டம் நடத்தினால் கர்நாடகத்தில் தமிழர்களைச் சுமமா விடுவார்களா என்று குதர்க்கம் பேசியது அஹிம்சா வழியா? இதையெல்லாம் ஆறரைக் கோடி தமிழ் மக்களுக்கும் நன்றாகவே தெரியும். புதிய வேடம் தரித்து அவர்களை யாரும் ஏமாற்ற முடியாது.

ராமதாஸுக்கு எதிராக ஆபாசமான, அருவருப்பான சுவரொட்களை ஒட்டியவர்கள் யார்? அதைக் கண்டு கொள்ளாமலும் கண்டிக்காமலும் இருந்தவர்கள் யார்? விருது நகர் மாநாட்டுக்குச் சென்ற போது ராமதாஸுக்குக் கறுப்புக் கொடி காட்டக் கட்டளையிட்டவர்கள யார்? என்பதையெலலாம் தமிழக மக்கள் நிச்சயம் எண்ணிப் பார்ப் பார்கள் என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (து)



தென்னாபிரிக்க நாட்டில் ஜோகன்னஸ்பார்க் நகரில் [illegible] இந்திய வம்சாவளியினரும் தென்னாபிரிக்க காங்கிரஸ தலைவர்களும் அடைக்கப்பட்ட வரலாற்றுப் புகழ்வாய்ந்த சிறைச் சாலையை குடியரசுத் துணைத் தலைவர் பைரோன் சிங்கொவத் பார்வையிடுகிறார்.

## இந்தியச் செய்திகள்



மக்களவைத் தேர்தலில் இதுவரை மூன்று கட்டத் தேர்தல்கள் நடந்து முடிந்துவிட்டன. வரும் மே மாதம் 5ந் திகதி மற்றும் 10ந் திகதிகளில் 4ஆம், 5ஆம் கட்டத் தேர்தல்கள் நடைபெற உள்ளன. தேர்தல் பிரசாரத்திற்காக பிரதமர் வாஜ்பாயின் ஓவியத்தை வரையும் கலைஞர் ஒருவர்.

# பொடா மறு ஆய்வுக்குழுத் தீர்ப்பை அமுல்படுத்துமாறு வை.கோ.வழக்கு

(சென்னை)

பொடா சட்டத்தின் கீழ் தன் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கை திரும்பப் பெறக்கோரி ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ. தாக்கல் செய்த வழக்கை சென்னை உயர்நீதி மன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது.

நீதிபதி ரவிராஜ பாண்டியன் முன் னிலையில் வை.கோவின் மனு அண்மையில் விசாரணைக்கு வந்தது. அவர் சார்பில் மூத்தவழக்கறிஞர் வி.சந்துரு வாதாடினார். வை.கோ மீதான குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று பொடா மறு ஆய்வுக் குழு கூறியுள்ளது. ஆனால் பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் தமிழக அரசு வை.கோ மீது இவ்வழக்கைத் தொடர்நது நடத்தி வருகிறது .வழக்கைத் திரும்பப் பெறுமாறு அரசுக்கு உத்[illegible]தரவிட வேண்டும். இம் மனு மீதான விசாரணை முடியும் வரை பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் வை.கோ மீது நடைபெறும் வழக்குககு இடைக் காலத் தடைவிதிக்க வேண்டும என்று அவர் வாதாடினார்.

அரசுத் தரப்பில் அட்வகேட் ஜெனரல் என்.ஆர்.சந்திரன் வாதாடினார். வை.கோ மீதான குற்றச்சாட்டில் ஆதாரம் இல்லை என்று பொடா மறு ஆய்வுக்குழு வெளியிட்ட உத்தரவை எதிர்த்து தமிழக அரசு மனுத தாக்கல் செய்துள்ளது. எனவே அம் மனு விசாரணைககு வரும்வரை வை.கோவின் மனுவை விசாரணைக்கு ஏற்கக்கூடாது. பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் அவர் மீது நடைபெறும் விசாரணைகுத் தடை விதிக்கக் கூடாது என்று வாதாடினார்.

இந்நிலையில் நீதிமன்றத்தில் அமர்ந்திருந்த அ.தி.மு.க மாநிலங்[illegible]களவை உறுப்பினரும், வழக்கறிஞருமான என்.ஜோதி இவ்வழக்குத் தொடர்பாக வாதிட நீதிபதியிடம் அனுமதி கேட்டார். நீதிபதி அவருக்கு அனுமதி அளித்தார்.வை.கோ மீது பூந்தமல்லி நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குக்குத் தடை விதிக்கும் முன்பாக இருமுறை சிந்தியுங்கள் என்று ஜோதி கூறினார்.

அவரது பேச்சால் கோபமடைந்த நீதிபதி ரவிராஜ பாண்டியன், நீதிமன்றத்துக்கு நீங்கள் ஆலோசனை கூறத் தேவையில்லை. வழக்கு தொடர்பாக மட்டும் வாதிடுங்கள் என்றார். இதையடுத்து மேற்கொண்டு எதுவும் பேசாமல் அமர்ந்தார் ஜோதி.

அரசின் மனு விசாரணைக்கு வரும் வரை வை.கோ. மீது.கோ மீது விசாரணை நடைபெறாது என்று அட்வகேட் ஜெனரல உறுதி அளித்தார். (து)

# ஹிட்லரை கிலிகொள்ள வைத்த புனித திரேசா

நாஸிக்களின் பயங்கரம் தலைவிரித்தாடிய உச்ச கட்டம். ஹிட்லர் என்றதும் ஐரோப்பா முழுவதும் மட்டுமல்லாது உலகமே பயந்து நடுங்கிய போது அவரது நாட்டின் ஒரு குக்கிராமமான கானர்ஸ்ருத்தில் வசித்த பெண்மணி ஒருவரைப் பார்த்து அவர் பயந்தார். புனிதை தெரஸே நுய்மனின் செல்வாக்கு கத்தோலிக்க மக்களிடையே வேகமாகப் பரவி வருவது தனது சாம்ராச்சியத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தி விடும் என்று பயந்த ஹிட்லர் அவரைக் கொன்று விடும்படி தனது அதிகாரிகளிடம் பணித்தார். அவர்களும் உள்ளூர் மக்கள் சிலரைத் தங்கள் கைகளில் போட்டுக் கொண்டு புனிதை தெரஸேயைக் கொல்ல பல தடவைகள் முயன்றார்கள். அந்த முயற்சிகள் பலனளிக்காமல் போகவே அந்த அதிகாரிகள் ஒரு டாங்கி அணியைக் கொண்டு வந்து தெரஸே வசித்த கிராமத்தின் மீது குண்டு மழை பொழிய வைத்தார்கள். கிராமம் அழிந்தது. ஆனால் அந்த அழிவின் மத்தியில் தெரஸே வசித்த இல்லமும் அதன் அருகில் இருந்த தேவாலயமும் எந்தவித பாதிப்பும் இன்றி நிமிர்ந்து நின்றன. அன்னையின் முன் தனது அதிகாரமும் படை பலமும் பலவீனப்பட்டு நிற்பதை ஹிட்லர் உணர்ந்த போது இரண்டாவது உலக மகா யுத்தினால் ஜெர்மனி சின்னாபின்னமடையத் தொடங்கி விட்டது. நேச நாடுகளின் தாக்குதல்களுக்கு கானர்ஸ்ருத்தும் தப்பவில்லை. ஆனால் அப்பொழுதும் கூட . கிராமத்தின் ஏனைய பகுதிகள் தரைமட்டமாகிய போது அன்னை வசித்த வீடும் அருகில் இருந்த தேவாலயமும் எந்தவித சேதமும் இன்றியிருந்தன. நேச நாடுகளின் ஆயிரத்து 200 இராணுவத்தினரைக் கொண்ட முதலாவது காலாட்படை கிராமத்தினுள் நுழைந்த போது இந்த அதிசயத்தைக் கண்டு வியந்தனர். அவர்களில் பலர் அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால் அவரது தரிசனத்தைப் பெறச் சென்றார்கள்.

அப்பொழுது அன்னை தேவாலயத்தில் இருந்தார். தன்னுடன் உயிர் தப்பியிருந்த தேவாலய மதகுரு நேபருக்கும் வாத்தியக்காரருக்கும் பலிபீடத்தில் மலர்களை ஒழுங்கு படுத்துவதற்கு அவர் உதவிக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்தவர்களுக்கு இரண்டு விடயங்கள் மனதில் பதிந்தன. ஒன்று நடுத்தர வயதை அண்மித்த அவர் நீண்டகாலமாக உண்ணா நோன்பைக்

கடைப்பிடித்திருந்த போதிலும் நல்ல ஆரோக்கியத்துடனும் சிறிது பருத்த உடலுடனும் காணப்பட்டார். மற்றது சாதாரண கிராமத்துப் பெண் போலத் தோற்றமளித்த போதிலும் அவரது முகத்தில் தெய்வீக ஒளி வீசியது.

நேச படையைச் சேர்ந்தவர்கள் அன்னையைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பிய போது பிதா நேபர் ஒரு மொழிபெயர்ப்பாளர் ஊடாக அவரைப் பற்றி விபரித்தார். அன்னை தெரஸே 1898ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ம் திகதி விவசாய குடும்பம் ஒன்றில் பிறந்தார். 22 வருடம் சாதாரண ஜெர்மனிய நாட்டுப்புற இளம் பெண்ணின் வாழ்க்கை எவ்வாறு இருக்குமோ அது போன்றே அவரது வாழ்க்கையும் அமைந்தது. அதன் பின்னர் 1920ம் ஆண்டு ஒருநாள் அவர் ஏணியில் இருந்து கீழே விழுந்ததில் முள்ளந்தண்டு பாதிப்படைந்து அவயவங்களை சுயமாக இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. போதாக் குறைக்கு கண்பார்வையும் கெட்டு விட்டது. ஏழு வருடங்கள் அவர் படுக்கையிலேயே கழித்தார். எழும்பவோ அல்லது உட்காரவோ முடியாத நிலை. 1926ம் ஆண்டு புனிதர் பெனடிக்ட் விழாவின் போது தெய்வீகக் காட்சி ஒன்றை அவர் கண்டார். அதன் பின்னர் தீவிரமாக அவர் மேற்கொண்ட பிரார்த்தனையும் வேண்டுதலும் அவருக்கு குணத்தை ஏற்பட வைத்தன. கண்களும் ஒளிபெற்றன. அதேசமயம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கிறிஸ்துவின் புனித காயங்கள் அவரது தலை, மார்பு, கைகள், பாதங்கள் முதலிய இடங்களில் தோன்றத்தொடங்கின. அவர் உணவையும், பானகங்களையும் ஒதுக்கினார். புனித காரணங்களுக்காக உட்கொள்ள வேண்டியிருந்த சிறிய நாணயம் அளவான, காகிதத்தைப் போல மெல்லிய நிவேதனம் ஒன்றை அவர் தினமும் காலையில் அருந்தினார். உரிய முறையில் அந்த அப்பம் நிவேதிக்கப்படாதிருப்பின் அது மிகவும் சிறியதாக இருந்த போதிலும் அதனை அவரால் விழுங்க முடியாது. அதுமட்டுமல்லாது கிறிஸ்துவின் நாமத்தினால் தரப்படும் அப்பத்தை அருந்த வேண்டியது புனித கடமைகளில் ஒன்றாகவும் நினைத்துத்தான் அவர் அதனை ஏற்றுக்கொண்டாரே தவிர. உடல் தேவை கருதியல்ல. மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று பைபிளில் மத்தேயு 4ம் அதிகாரத்தில் குறிப்பிட்டிருப்பது போன்று உணவில் தெரஸே தங்கியிருக்கவில்லை. தேவனைப் பிரார்த்திப்பதன் மூலம் கிடைத்த அற்புத சக்தியினால்தான் உயிர் வாழ்ந்தார். அதனால்தான் ஒரு குழந்தைக்கு இருப்பது போன்ற புத்துணர்ச்சியும் வசீகரமும் அவரிடம் தென்பட்டது. நல்ல ஆரோக்கியத்துடனும் நன்கமைந்த உருவத்துடனும் ரோசா நிறக் கன்னங்களுடனும் மகிழ்ச்சி நிறைந்தவராகவும் காணப்பட்ட அன்னை உண்பதே இல்லை என்பதை ஏற்றுக் கொள்ள மறுத்த பலர் அவரை பல வழிகளிலும் சோதித்துப் பார்த்திருக்கிறார்கள். மதகுருமாரின் அனுமதியுடன் விஞ்ஞான ரீதியாக தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் தெரஸே உண்மையில் தேவனின் வார்த்தையினால்தான் வாழ்கிறார் என்ற முடிவுக்கே ஆய்வாளர்கள் வந்திருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் காயங்கள் உடலில் ஏற்படும் போது ஏராளமான இரத்தம் வெளியேறுவதால் திரஸேயின் எடையில் சுமார் பத்து இறாத்தல் குறைவது வழக்கம். இரத்தப் பெருக்கு மட்டுமல்லாது, காயங்களினால் ஏற்படும் வலியும் இயேசு சிலுவையிலும் அதற்கு முன்னும் அனுபவித்த வேதனைகளைத் தானும் அனுபவித்த போதிலும் அவற்றை எல்லாம் மற்றவர்களுக்கு உதவுவதற்காகவும் பைபிளின் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று இயேசுவின் வாழ்க்கையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதும் வரலாற்று உண்மை என்பதை சகல மக்களுக்கும் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துவதற்கும், இயேசு என்றென்றும் ஜீவித்திருப்பவர் என்பதை நிருபிப்பதற்கும் தேவனின் நியதிப்படி திரஸே ஏற்றுக் கொண்டிருந்துள்ளார். அவரது பிரார்த்தனையின் மூலம் பல நோயாளிகள் சுகம் கண்டிருக்கிறார்கள். பலருடைய நோய்களை அவர் தனது உடலில் தாங்கி அதனால் ஏற்படும் உபாதைகளையும் அனுபவித்திருக்கிறார். அவர் சார்ந்திருந்த தேவாலய திருச் சபையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மதகுருவாக வருவதற்கான பயிற்சியை ஆரம்பிக்க இருந்த சமயம் அவனது தொண்டையில் புற்று நோய் போன்ற கடுமையான நோய் ஏற்பட்டு விட்டது. அந்த இளைஞரின் நோயை தனது தொண்டைக்கு மாற்றிக் கொண்ட பின்னரே அன்னையினால் உணவையோ அல்லது பானம் எதனையுமோ அருந்த முடியாத நிலை ஏற்பட்டது. அந்த நிலையை அவர் வலிந்து ஏற்றுக் கொண்டதால்தான் தேவனது அருளினால் உணவின்றியே அவரால் 1962ம் ஆண்டு இயற்கை மரணம் ஏற்படும்வரை இருக்க முடிந்துள்ளது.

கிறிஸ்துவின் தழும்புகளை வெளிப்படுத்தும் காயங்கள் முதன் முதலில் புனிதர் பவுலுக்கே ஏற்பட்டதாக நம்பப்படுகின்றது. அவர் காயங்களினால் ஆசீர்வதிக்கப்பட்டதை பைபிள் புதிய ஏற்பாட்டில் அதிகாரம் கலாததியர் பிரிவு 17ல் நாம் காண்கிறோம். இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக, கர்த்தராகிய இயேசுவினுடைய அச்ச அடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்திருக் கிறேன் என்று அவர் கூறியிருக்கிறார். அந்த காயங்களைத் தரித்திருப்பதற்கான காரணத்தையும் அவர் பின்வருமாறு விளக்கியிருக்கிறார். இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அனுபவிக்கிற பாடுகளில் சந்தோசமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன். (கொலோசெயர் 1:17) அருளாளர்கள் மற்றவர்களுக்கு கருணை புரிவதற்காகவே கிறிஸ்துவின் பாடுகளை அனுபவித்ததுடன் அவரது தழும்புகளையும் தாங்கியிருக்கிறார்கள் என்பதை பவுல் முதல் அன்னை தெரஸே வரையிலான புனிதர்களின் வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அன்னையின் அருகில் இருந்து அவர் புரிந்த அற்புதங்களையும் கிறிஸ்துவின் காயங்கள் அவர் உடலில் ஏற்படுவதையும் அவதானித்த பின்னர் அவற்றை எல்லாம் தொகுத்தவர் டாக்டர் பிரிட் ஜெட்ரிஜ் என்ற ஜெர்மானியர். அன்னையை எதுவும் செய்ய முடியாது போகவே அவரது புகழ் பரவுவதை எந்த வகையிலேனும் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற வெறி பிடித்திருந்த கிட்லரின் ஆணைப்படி கேஸ்டபோ என்று அழைக்கப்பட்ட இரகசிய பொலிஸார் டாக்டர் பிரிட் ஜ படுகொலை செய்து விட்டார்கள். எனினும் அன்னையின் புகழ் பரவுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

நன்றி: கனடா முரசு

## ஐ.ம.சு.மு. எம்பிக்கள் மூன்று பேர் இராஜினாமா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதநதிர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினர்களான ஜனதாஸ பீரிஸ், மேரி லுசிதா, பி.சீ.வீரசேகரா ஆகியோர் இராஜினாமாச் செய்துள்ளனர். இவர்கள் தமது இராஜினாமாக் கடிதத்தை நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளரிடம் கடந்த செவ்வாய் அன்று கையளித்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் இரட்ண ஸ்ரீ விக்கிரம நாயக்க, மேர்வின் சில்வா, அரசியலமைப்பு நீதிபதி ஜெயம்புதி விக்கிரம நாயக்க ஆகியோரை நாடாளுமன்றத திற்கு அனுமதிக்கும வகையில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சநதிரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுத்துள்ள வேண்டுகோளினபடியே இவர்கள் தமது பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளனா. (உ)

## கோட்டுவாசல் அம்மன் ஆலயத்தில் 6 மணிக்குப் பின் நடமாடத் தடை

(திருநெல்வேலி)

பருத்தித்துறை கோட்டுவாசல் அம்மன் ஆலயத்தில் மாலை 6.00 மணிக்குப் பின்னர் பக்தர்கள் நடமாடுவதற்கும், பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் இராணுவத்தின் 524ஆவது படைப்பிரிவுத் படைத்தலைமையகம் தடை விதித்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ் ஆலயத்தின் மஹோற்சவம், தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இதனாலேயே, மாலை 6 மணிக்குப் பின்னரும் பூஜை வழிபாடுகள் நடாத்தப்பட்டு வந்தன.

எனினும், இராணுவத்தின் 524 ஆவது படைத் தலைமையக எல்லைக்குள்ளே இவ் ஆலயம் அமைந்துள்ளதால் மாலை 6.00 மணிக்குப் பின்னர் இங்கு பூஜை வழிபாடுகள் மேற்கொள்வதற்கும், வீடியோ மற்றும் கமரா போன்ற கருவிகளை எடுத்துச் செல்வதற்கும் நேற்று முன்தினம் மேற்படி படைத் தலைமையகம் தடை விதித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ-43)

## ஜே.வி.பி. அமைச்சர்கள் மகாநாயக்கர்களுடன் சந்திப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் அமைச்சர்கள் மற்றும் பிரதிஅமைச்சர்கள 8 பேர் நேற்று மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துள்ளனர்.

அமைச்சுக்களின் கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் மதத் தலைவர்களின் ஆசீர்வாதம் பெறவேண்டி இச்சந்திப்பு இடம் பெற்றதாக விவசாய கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அனுரதிஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் அமைச்சர்கள் நேற்று முன்தினம் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இவர்கள் தங்களது அமைச்சுப் பொறுப்புக்களை இன்று வெள்ளிக்கிழமை ஏற்கவுள்ளனர். (தி-63)

## குழியில் விழுந்த சிறுவன் மரணம்

(கொழும்பு)

பொகாவந்தலாவைத் தோட்டத்தில் உள்ள மாணிக்கக் கற்கள் அகழும் குழியொன்றில் தவறி விழுந்த 11 வயதுச் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுள்ளது.

பொகாவந்தலாவை டின்சின் தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் புஷ்பராஜ் மகேஸவரன் என்ற மாணவரே உயிரிழந்தவராவார். (உ-10)

# வெள்ளி முற்றம்

# வெறி தீர்ந்தது!

## சி.சுதந்திரராஜா

யோகம் இருக்கிறது. புத்தகம் மேசை மீதினிலே குப்புறவும் கிடக்கிறது. முழுக் கடலுக்குள் இறங்கியவன் முத்தெடுப்பதுபோல அனந்தன் நூல் நிலையத்தைக் கடைந்தெடுத்து வந்த அந்த நூல் அப்படிக் கிடந்தது. எரிச்சல் ஒன்றே மிதந்தது. எழுத்தாளர்கள் பிற எழுத்தாளர் மீதினிலே நொட்டையும் குட்டையும் சொல்லி பரணியோ புறணியோ பாடுதல் படைப்புத் தொழில் எனக் கருதி விடுகின்றது. அவனுக்குத் தெரிந்துவிடுகிறது. எஸ்போ எப்படி இதனைத் தேர்ந்தெடுத்து வெளியிட்டாரோ என்ற தேடல் நூலில் தேடிய எஸ்போவை விட சுவாரஸ்யம் படித்து மறந்தவை மீள மனதில் மிதப்புக் கட்டைகளாக வடிவெடுத்து அவனுள் வெளித்தெரிந்தன. நினைவிலி மனதுள் வெளித்தெரியாதது போல் மயங்கிக் கிடந்தன. எல்லாமுமே வெளித்தெரிந்தன.

சடங்கு என்கின்ற ஒரு தலைப்பில் இரண்டு பெரிய எழுத்தாளர்கள் புதினம் படைத்திருப்பது செவியுற்று தேடித்துருவி எடுத்து ஒரே மூச்சில் உள்வாங்கினான். ஒரே கல்லெறியில் இரண்டு மாங்காய் கொய்தவனானான். இரவல் நூலகப்பகுதியில் இரண்டுமே ஒரு தருணத்தில் அகப்படுவதாயிருந்தது. இரண்டு வார விடுப்பில் நூலகரிடம் வாங்கிக் கொண்டான். அவனை வெகு விநோதமாகத்தான் நூலகர் பார்த்து வைத்தார். அந்தப் பார்வை ஆயிரம் அர்த்தங்கள் தொங்கிடக் கச்சேரி விசாரணையே பார்க்கிறது போல் பாதணிகளையும் அவன் உடுப்பையும் நோட்டமடித்து இரவல்பெற்ற அட்டைக்குள்ளே நூலின் பெயரையும் பதிவெண்களையும் கொண்ட அட்டையை ஒருவாறு செருகினார். தூங்குவதில் அலாதிப்பிரியர். நல்ல நூல் நல்ல சிநேகதர் போல் அமைந்து குவிந்து கிடக்கிற இடத்தில் தூங்கிவிட்டு தூங்கிற நேரத்தில் என்னதான் செய்யப்போகிறாரோ என்று யோசித்துக் கொண்டான். பத்திரிகைகளை விரித்தாலும் நிறை குறைந்த குடமாகவே தலை சொருகி சாய்ந்திடுவார். அரசியல் நடவடிக்கைகள் அக்கறை தேவைப்படாததே என்று கருதுவாரோ தெரியாது.

தீ வாசித்த போது கிளர்ந்தெழுந்த பாலுறவு வக்கிர உக்கிரங்கள் மறுபடி எஸ்போவின் சடங்கு வாசிக்கின்றபோது வந்துகொண்டது. கொழும்பில் தொழில் புரிகின்ற யாழ்ப்பாணத்து எழுதுவினைஞர் ஒருவார விடுப்பில் ஊருக்கு வந்ததும் உடல்பசி தீர்த்திட இயலாது. திணறுகின்ற சித்திரம் அனந்தனுக்கு விசித்திரமாகவே தெரிந்தது. ஏனாகில் அந்தச் சூழல் அடியோடு மாறிவிட்டது. விலாவாரியாக அவர்படும் அவஸ்தை அனந்தனுக்கு வேடிக்கை காண்பித்தது. அதே வீச்சில் செகவின் புதினம் சோகம் படர்ந்த யாழ்ப்பாண வாழ்நிலை சீதனக் கொடுமையை அக்குவேறு ஆணி வேறாக்கி வெட்டு முகவடிவில் காண்பித்தது. கதையோடு ஒன்றிப்போனான் ஒரே மூச்சில் ஒரே தலைப்பில் இருந்த நூலைப் படித்துமுடித்து வெறி தீர்த்தான்.

அவனுக்கு மூத்தவர்கள் மூன்று பெண்கள். மூவருக்கும் வீடுகள் கட்டி, கிணறுகள் வெட்டி, காணிக்கு மதில்கள் போட்டு குமர் கரை சேருதலைப் பெற்றோர்கள் எத்தனை இன்னல்களிலும், இக்கட்டுகளிலும் ஒப்பேற்றியதை நேரில் அனுபவித்தவன். ஆதலினாலே கதை அம்சத்திலே கலந்த ஓர் இயல்பு அவனோடு நன்றாகவே ஒட்டிக்கொண்டது. உணர்வு மிகுதியால் கண்களே பனித்தன. மனங்கவர் கருத்து மகோன்னத சக்தி படைத்ததைத் தான் உணர்ந்தான். விரோதச் சடங்குகள் விரட்டப்படுவதாயின.

ஜானகிராமன் ஜெயகாந்தன் சலித்துப்போகின்ற வேளைகளில் மிகுந்த பழங்கால மணிக்கொடி யுகத்தில் புகுந்துகொள்ளுதல் இன்பமாய் இருந்தது. கு.பா.ரா. சிறுகதை என்று மகுடமிட்டு முதன்முதலில் எழுதியது. அதன் தலைப்பால் ஆனந்த மூட்டுவதாகவே அனந்தனுக்கு அமைந்தது. பொன்னகரம் என்ற புதுமைப் பித்தனின் சிறுகதை ஈற்றிலே அற்பமாகக் கற்பை விற்றுப் புருஷன் சுகம் சேவிக்கின்ற பெண்ணையே அற்புதமாகப் படம்பிடித்து அவனை வெகுவாக ஆகர்ஷித்து ஆட்டுவித்தது. கடுகளவில் அமைந்த கதை - வித்தை அவனில் இன்னமும் வாசிக்கின்ற ருசியை அதிகரித்து வைத்தது.

புதினப் பேரரசுவின் மயிலிறகையும் மறைமலையடியின் குமுதவல்லியையும் அடுத்த தேர்வில் ஒரு சேர இருநூல்களையும் நூலகத்தில் பெற்றுக் கொண்டான். அழகு தமிழ் கொஞ்சி விளையாடிய பக்கங்களாகவே இருந்தன. கவிதை மழை போல் கதையமைப்பு தெரிந்தது. தூக்கிக் கிடப்பில் போட்டுவிட்டு தன்வீட்டு வேலைகளைக் கண்காணித்தான். பூவரசு மரக்கொப்புகளை ஒட்டவெட்டி சீர்செய்தான். தண்ணீரள்ளி ஊற்றினான். ஏட்டுச் சுரக்காய்கள் வீட்டுத் தோட்டத்திலே பழுக்காது போல் இருந்தது. வாழைக்குட்டிகள் வைப்பதற்கான மண் பாத்திகளைக் கோலி எடுத்தான். தூர்ந்து கிடந்த தரையை மண்வெட்டியால் சீர்செய்து பரவியபோது அவனில் புதியதான சிந்தனை ஒன்று பெருவட்டமடித்தது.

சோதி மாமி வீட்டிற்குப் படையெடுத்தான். திறிபேஸ் மோட்டர் போட்டு கரட்-கோவா-ஏராளமாகச் செய்கை பண்ணப்போவதாகச் சொல்லிக் கொண்டான். மாமி மசிவதாயில்லை. பணம் புரட்டிட முடியாமலே போய்விடும் போலிருந்தது. வசீகரன் மாமி வீட்டின் ஒரு பெருமகன. எதிர்வாதத்தில் இறக்கிவிட்டான். அனந்தன் தத்தளித்தான், கலங்கினான்.

உறவுமுறை உற்பத்தித் தேக்கத்தைப் போக்கிட உதவுவதாயில்லை. உபத்திரவம் ஊட்டுவதாயிருந்தது.

''இவ்வளவு காலமும் என்ன செய்தனீ''

''படிபடியெண்டு படிச்சது தான்''

''என்னத்தைப் படிச்சுக் கிழிச்சனீ, சவப்பெட்டிக்கும் உதவாது''

''சவப்பெட்டியைக் கூட தன்ரை பிள்ளை செத்துக் கிடக்கேக்கை வாங்கேலா கார்ல்மாக்ஸ் பூமிப்பந்தின்ரை போக்கையே அடியோடை மாத்தித் தன்ரை படிப்பாலையே எல்லாத்திலையும் நிலைச்சுப் போனவர்''

வசீகரன் அத்தோடு மேலும் வாதம் புரியாமலே ஒதுங்கிக் கொண்டான். அனந்தன் ஆபத்தானவன் போல் அவனுக்குப் பட்டிருக்கலாம். சோதி மாமி வீட்டிலே இப்படி எழுந்த தடங்கல் துச்சமாகிப் போய்க் கொண்டிருந்தது. மின் இணைப்புத் திட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திப்போடுவதே உசிதம் என்றெண்ணினான்.

கீரை வகைகளின் புதுவிதைகள் அவன் கைப்பெட்டியில் மிளிர்ந்தன. பசளை விரவிய நிலத்தில் அனந்தன் காலூன்றிக் கொண்டான். தளரா நம்பிக்கையின் ஒளிக்கீற்றுப்போலவே அவன் ஏந்திய கைப்பெட்டியில் விதைகள் மிளிர்ந்தன. அள்ளியெடுத்து விதைகளை சேற்று நீரினில் நன்கு தூவி விட்டான். அவன் காணாததை காட்டுகின்ற வேகம் கைவீச்சில் விழுந்த விதைகளில் தொனித்தது. உருப்படும் படிப்பும் அதில் உருவெடுத்தது.

# சமாதானம் நிறைந்த நாட்டை கட்டியெழுப்பப் பாடுபடுவோம்

## ஜே.வி.பி அமைச்சர் உறுதிப்பாடு

(கொழும்பு)

ஊழல் மோசடிகளை ஒழித்து அமைதியுள்ள சமாதானமான நாட்டைக் கடடியெழுப்பப் பாடு படப போவதாக நேற்று முன் தினம் அமைச்சுப் பொறுப்புக் களைப் பொறுப்பேற்ற ஜே.வி.பி யின் அமைச்சர்கள் உறுதிமொழி அளித்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அர சாங்கத்தின் கொள்கைகளை மதித்து அவற்றினை நல்ல முறை யில் செயற்படுத்துவதன் மூலம் மக்களுக்குப் பல நன்மைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர்கள், பிரதியமைச் சர்கள் பதவிகளைப் பொறுப் பேற்ற தன் பின்னர் கொழும்பு தர்மாயத்தனேய என்ற அறநெறி நிலையத்துக்கு சென்று வழிபாடு களில் பங்குகொண்ட பின் பத்தி ரிகையாளர் மத்தியில் பேசும் போது இக் கருத்துக்களை அவர் கள் வெளியிட்டனர். (உ-121)

# பொலிஸ் உளவுப் பிரிவுகளை வலுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தின் கீழ் இயங்கும் உளவுப் பிரிவு களை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ள பொலிஸ்மா அதிபர் இந்திரா டீ சில்வா தெரி வித்தார்.

பொலிஸ்மா அதிபர் மேலும் கூறுகையில்,

அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கப் படவிருக்கின்றது. இது தொடர் பாக பொது மக்களிடம் இருந்து தகவல்களைப் பெறுவதற்கான விசேட செயற்திட்டங்களை நடை முறைப்படுத்தக் கிட்டமிடப்பட் டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் உளவுத்துறைப் பிரிவுக்குத் தனி யான பிரதிப் பொலிஸ்மா அதி பரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக் காட்டினார்.

(உ-121)

## விடுமுறை தினத்தில் கடைகள் திறக்கும்

(யாழ்ப்பாணம்)

2004 மே மாதம் 1,2,4,5ஆம் திகதிகளில் தொடர்ந்து விடுமுறை தினங்களாக அமைவதனால், விடுமுறை தினங்களான 1ஆம் திகதி மே தினம், 2ஆம் திகதி ஞாயிறு, 4ஆம் திகதி சித்திரைப் பூரணை ஆகிய முக்கிய விடுமுறை தினங்களில் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி 05.05.2004 புதன்கிழமை நுகர்வோரின் நலன்கருதி வர்த்தக ஸ்தாபனங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு வர்த்தகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

இவ்விடுமுறை தினத்தில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேணடும் எனவும் யாழ்.வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (உ)

# மாணவர்களை நெறிப்படுத்துவதில் அதிபர்களின் பங்கு- பணி அவசியம்

## உடுவில் கோட்டப் பணிப்பாளர்

(இணுவில்)

மாணவர்களின் அனைத்து செயற்பாடுகளிலும் அதிக கவ னம் செலுத்தப்பட வேண்டும். மாணவர்களின் வரவு மற்றும் ஒழுக்கம் போன்ற விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண் டிய பொறுப்பு அந்தந்தப் பாட சாலை அதிபர்களையே சாரும்.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இராம நாதன் கல்லூரியில் நடைபெற்ற உடுவில் கல்விக் கோட்டப் பாட சாலை அதிபர்களுடனான சந் திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

போட்டிகளை மட்டும் இலக் காகக் கொண்டு மாணவர்க ளைத் தயார்ப்படுத்தாது, மாண வர்களின் ஆற்றலை வளர்க்கும் வகையில் பாடசாலைகளிலும் தமிழ்த் தின விழா மற்றும் ஆங் கிலத் தினவிழா போன்ற நிகழ்வு களும் கொண்டாடப்பட வேண் டும்.

இவற்றில் பாடசாலை அதிபர் அனைவரும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். மேலும், க.பொ.த. (சா/த) மாணவர்கள் மற்றும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் ஆகியோருக்கு சனி, ஞாயிறு தினங்களில் விஷேட பரீட்சை வழிகாட்டல் பயிற்சி வகுப்புகளும் கருத்தரங் குகளும் நடாத்தப்பட வேண்டும். இதற்காக கோட்டத்தினால் விஷேட செயற்றிட்டங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், மாணவர்களின் செயற்பாடுகளில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கூடுதல் கவனம் செலுத்துதல், பிரச்சினைக்குரிய மாணவர் களை இனம் காணப்பட்டு, அவர வர் பெற்றோருடன் கலந்துரை யாடல் நடாத்துதல், மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை கள் ஒழுக்காற்றுச் சபை ஊடா கவே மேற்கொள்ளப்படல் ஆகி யன அவசியம் எனக் குறிப்பிட் டார்.

(உ-122)

# இறை உணர்வை வளர்த்து உயிருக்கு அரண் செய்வோம்

அறிவியல் வளர்ச்சியால் பல அறிய செய்திகளை அறிந்துள் ளோம். அறிந்து கொண்டும் இருக்கிறோம். இதனால் பெறப்



படும் வாழ்க்கை வசதிகளைத் துய்த்து,மகிழ்ந்து வருகிறோம்.

உலகம் மிகச் சுருங்கிவிட்டது. ஆயிரம் ஆயிரம் மயில்கள் தொலைவில் உள்ள நாடுகளில் நடப்பவை எல்லாம் எமது மேசையில் காண்கின்றோம், கேட்கின்றோம்.

அது மட்டுமா?நவக்கிரகங்கள் என எம்மால் வணங்கப்படும் கோள்களையும் சென்றடையும் வாய்ப்பையும் அறிவியல் தந்திருக்கிறது.

மட்டில்லா மகிழ்ச்சிதான் யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இந்த அதிவேக அறிவியல் வளர்ச்சி எதையோ மறந்து விட்டது,மறக்கவும் செய்து விட்டதோ?என்ற ஏக்கம் பலர் சிந்தனையில...

நியாயமான ஏக்கம் தான்! எலலாம் இருக்கவும் மனிதன் ஏதோ ஒன்றை தொலைத்து விட்டதாக உணர்ந்து ஏங்குகிறான்...ஏன்?

ஒருவன் ஓடுகிறான் குதிக்கிறான் பாய்கிறான், விளையாட்டுப் போட்டிகளில் பரிசில்கள் பெறுகிறான்.

ஏன்?மாடமாளிகைகள் கட்டி மகிழ்ந்து வாழ்கிறான்.எல்லாமே தன்னால் முடிந்தவை என்று நிமிர்ந்து நிற்கிறான் பாவம்!இவன் மமதைகண்டு ஒன்று மெல்ல நகைக்கிறது. அது மெல்ல நகைப்பதால் அவனுக்குக் கேட்கவில்லை. ஒருசிலருக்குக் கேட்கத் தான் செய்கிறது.

## வெள்ளி நற்சிந்தனை

இச் செயல்களுக்கும் வெற்றிகளுக்கெல்லாம் காரணமான நிலம் மெல்ல நகைக்கிறது. அறியாமை கண்டு வருந்தவும் செய்கிறது. "**நிலம் எனும் நல்லாள**"எமமையும் எமதுஆற்றலையும் வெற்றிப் பெருக்கின் வரம்பையும் ஒருசிலர் எண்ணிப் பார்த்தார்கள் எண்ணிப் பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள்.இவர்கள் "சாதாரணர்கள்" அல்ல.

அறிவியல் வல்ல ஆன்றோர்கள் அணுவில் ஆற்றலை அறிந்தவர்கள் அணுஆற்றலை தம் அடிமை ஆக்கியவர்கள். "**வீடு என்னை**" என்று விலகத் துடிக்கும் உயிரைக் கட்டி நிறுத்தி உடலை மேலும் சில காலம் வாழ வைக்கும் அறிவியல் வல்லோர் இவர்கள். தங்கள் அறிவியல் ஆற்றலின் எல்லை அறிந்தவர்கள். எல்லை தெரிந்தமையால் எல்லை இலாஆற்றல் ஒன்று இருக்கவே செய்கிறது என்பதை உணர்ந்தவர்கள்.

மனத்தூய்மையுடன் தங்கள் கருத்தைச் சொல்லியும் வருகிறார்கள். ஆகாயப் பெருவெளியையும் கோள்களையும் ஆய்வு செய்தவர்கள் முடிவில் தங்கள் ஆற்றலின் எல்லை தெரிந்து இதை ஆற்றலை ஏற்கவேண்டியுள்ளது என்கிறார்கள்.

"**வீரிக்கிற் பெருகும**"

ஒன்றை நாம் தீர்க்கமாகப் புரிந்து கொண்டால் தொல்லை இல்லை.

அறிவியலுக்கும் அருளியலுக்கும் என்றுமே போட்டி இல்லை. இதனால் மூடநம்பிக்கைகளை அருளியல் ஏற்றுக் கொள்கிறது. வளர்கிறது என்று கொள்வதற்கு எத்தகைய ஆற்றல் மிகுந்த அறிவியலாளனின் செயற்பாட்டையும் மேற்பார்வை செய்ய ஒருவன் இருக்கவே செய்கிறான்

இதேபோன்று எமது செயல்கள் தன்மை தெரிந்து நிறைசெய்து பயன் வழங்க ஒருவன் உழன் என்ற எண்ணம் எம்மை நிறை வழிநிற்க பெரிதும் உதவும். இக்கருத்தை மெய்யியல் மேதை Smjode வலியுறுத்தியுள் ளார். இதையே வள்ளுவப் பெருந் தகை ரத்தினச்சுருக்கமாக "**வகுத் தான**"என்கிறார்.

கப்பலுக்கு மீகாமன் அவசியம்,கல்லூரிக்கு அதிபர் அவசியம்,வீட்டுக்கு இல்லாள் அவசியம்,நாட்டுக்கு நல்ல தலைவன் அவசியம் இவைபோல "...யினும் நல்ல தலைவன**"என்று அடியார் போற்றும் இறையுணர்வை வளர்த்து உயிருக்கு அரண் செய்வதே அருளியல்.

புரிந்தவர்கள் அறிவியலிலும் அருளியல் பேணுவார்கள். புரியாதவர் தம்பேதமைகண்டு "**ஓடி மீழ்கென ஆடல் பார்த்திருப்பான**" எம்மிறை

"**தெய்வம் என்பதோர் சித்தம**" உண்டாவதாக

**க.சிவராமலிங்கம்**
**முன்னாள் பிரதி அதிபர்,**
**யாழ்.இந்துக் கல்லூரி.**

( நன்றி:-சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலய பொன்விழா மலர் )

## சிறுவர் நாடகப்போட்டி

(இணுவில்)

உடுவில் கல்விக் கோட்டத் திற்குட்பட்ட தரம்-5வரையான பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர் நாடகப்போட்டி எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதி உடுவில் கல்விக்கோட்டத்தில் இடம் பெறவுள்ளது.

இதற்கமைவாக சம்பந்தப் பட்ட பாடசாலை அதிபர்கள் இப்போட்டிக்கான விண்ணப்பங்களை உடனடியாகத் தமக்கு அனுப்பிவைக்குமாறு உடுவில் கோட்டக் கல்வி பணிப்பாளர் செ.குபேரநாதன் அறிவித்துள்ளார்.

அத்துடன் ,ஆக்கங்கள் யாவும் மாணவர்களின் கற்றல் செயற்பாடு,ஆளுமை விருத்தி என்பனவற்றை மேம்படுத்தும் வகையில் புத்திபுகட்டும் கதைகள், நீதிக்கதைகள், நல்ல பண்பாட்டை உணர்த்தும் கதைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மிருகங்கள் மற்றும் பறவைகள் போன்ற கதாபாத்திரங்களூடாக வெளிப்படுத்தப்படுபவையாக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

(உ-122)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக திரைப் பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் தமிழ் துணைத்தலைப்புடன் கூடிய ரஷியமொழி திரைப்படமான 'லர் உஷா' காண்பிக்கப்படவுள்ளது.

இப்படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராஜா,க.சட்டநாதர் மற்றும் விமர்சகர் ஏ.ஜே.கனகரத்தினா ஆகியோரின் நெறிப் படுத்தலின் கீழ் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது. (உ)

# அடக்கப்பட்ட மக்களின் எழுச்சி நாளில் அணி திரள்வோம் வாரீர்!

## நெதர்லாந்து தமிழ் பேரவை அழைப்பு

மே நாள் ஒரு மகத்தான நாள். தமிழீழ தேசியத்தின் பால் உலகத் தமிழர் நாமெல்லாம் ஒன்று பட்டு நிற்கின்றோம்' என்பதை உலகப் பாட்டாளி மக்களோடு இணைந்து வெளிப்படுத்த வேண்டிய நாள்.

தொழிலாளர் நாளாகிய இம் மே தினத்தில், உலக உழைப்பாளிகளின் உன்னதமான இத் தினத்தில் நாம் ஓர் மாபெரும் பேரணியை நடத்தி,எமது ஒன்று திரண்ட சக்தியை, எமது உறுதிப்பாட்டை உலகிற்கு வெளிக் காட்டுவோம். நெதர்லாந்து தமிழ் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்,

எங்கள் நிலம் எமக்கு வேண்டும் . எங்கள் நிலமே எமக்கு வேண்டும்.சொந்த வீட்டில் சொந்த வளவில் நட்ட மரங்களின் நிழலில் கூடி உறவுகள் சேர்ந்து கதைகள் பேச மீண்டும் நாங்கள் உயிர்த் திட ..வ எழுந்து வாருங்கள் எம் நெதர்லாந்து உறவுகளே!

Ø தமிழீழ மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்பன உறுதிப்படுத்தப்பட்டு, தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வு உரிய வழிமுறைகளில் தீர்க்கப்பட வேண்டும்.

Ø புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி சிறீலங்கா அரசுப் படைகள் தாம் படைத்தளங்கள் அமைத்துள்ள பாடசாலைகள், வணக்கஸ் தலங்கள், பொது இடங்கள், மக்கள் குடியிருப்புக்கள் என்பவற்றிலிருந்து காலம் தாழ்த்தாது உடன் வெளியேற வேண்டும்.

Ø தமிழீழ மக்களின் இயல்வு வாழ்க்கை பூரணமாகத் திரும்ப வேண்டும்.

Ø தாயக கடற்பரப்பெங்கும் எதுவித தடைகள் கட்டுப்பாடுகளின்றி கடற்றொழில் செய்வதற்கு தமிழ் மக்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.


Ø தற்சமயம் அரச சிறைகளில் வாடுகின்ற அனைத்து அரசியற் கைதிகளையும் உடன் விடுதலை செய்ய வேண்டும்.

ஆகிய வேண்டுகைகளை முன் வைத்து அடக்கப்பட்ட உலக மக்களின் எழுச்சி நாளான மே தினத்தில் அணிதிரள்வோம்.

'வலிமையே வாழ்வு 'என்பதைத் தாரகமந்திரமாய் நினைவிருத்தி தாயகத்தின் தேவையைப் விரைந்து பூர்த்தி செய்ய இன்றே உறுதியெடுப்போம் வாருங்கள் உறவுகளே!

உலகத் தொழிலாளர் நாளில்! உலகத் தமிழர் நாம் எல்லாம் ஓரணியில் திரள்வோம்! தேசியத் தலைவன் வழியில் விடியலை எட்டிடுவோம்! என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)



தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீஆதிமுத்துமாரி அம்மன் தேவஸ்தான அர்ச்சகர் சாதக இளவரத சிவஸ்ரீசு.ரங்கநாதன் ஐயாவிற்கு அண்மையில் குருப்பட்டம் வழங்கப்பட்டமையிட்டு நடைபெற்ற பாராட்டு விழாவில் தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர் கி.ரவிச்சந்திரன் பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்

# இளைஞர் படையணித் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இளைஞர் படையணித் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஜீவன் குமாரதுங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

படையணித்திட்டங்கள் யாவும் தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் இணைந்தே செயற்படுத்தப்படவுள்ளன.இதற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாகவும் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (தி-63)

## பஸ் தரிப்பிடத்தில் பாம்புப் புற்றுகள்

காங்கேசன்துறை வீதியில் இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள இருபக்க பஸ்தரிப்பு நிலையத்தைச் சூழப் பாம்புப் புற்றுகள் உருவாகியுள்ளதால் பயணிகள் பெரும் பீதியும் சிரமமும் அடைந்து வருகின்றனர்.

அத்துடன் வெற்றுக் கழிவுப் பெலுத்தீன் பைகள்,குப்பைகள் உட்பட தெரு நாய்களின் எச்சங்கள் போன்ற பலதரப்பட்ட கழிவுகளும் இத்தரிப்பு நிலையத்தில் காணப்படுவதால் அங்குபெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறமை குறிப்பிடத்தக்கது. (உ-122)



தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் வ.பரமேஸ்வரம்பிள்ளை நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படங்கள் :தொல்புரம் நிருபர்)

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். -குறள்

வலம்புரி

## லகஷ்மன் கதிர்காமரின் இந்திய விஜயம்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சென்றுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசு பதவி யேற்று இன்னமும் பாராளுமன்றத்தில் தனது பெரும் பான்மைப் பலத்தை நிரூபிக்க முன்னதாக -வெளி விவகார அமைச்சர் கதிர்காமர் அவசர அவசரமாக இந்தியாவுக்குச் சென்றுள்ளார். பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்த காலத்திலும் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் வெளி நாடுகளுக்குச் சென்று விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிராகப் பிரசாரம மேற்கொண்டு வந்தார். அவரின் விசமப் பிரசாரம் காரணமாக சில வெளிநாடுகள் விடுதலைப்புலிகள் அமைப்பை தமது நாடுகளில் தடை செய்தன.

தமிழ் மக்கள் இலங்கையில் படுகின்ற கஷடங்கள், துன்பங்களையெல்லாம் ஒளித்து- மறைத்து விடு தலைப் புலிகளை ஓர் பயங்கரவாத அமைப்பாக காட்டமுற்பட்ட லக்ஷ்மன் கதிர்காமரால், பொதுஜன ஐக்கிய முன்னணி முன்னெடுத்த சமாதானப் பேச் சுக்கள் குழம்பிப்போவதற்குக் காரணமாகியது.

அமைச்சர் கதிர்காமர் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுவதன் மூலம் ஜனாதிபதியிடமும், சிங்களத் தலைவர்களிடமும் தன்னை ஒரு சிங்கள விசுவாசியாகக் காட்டிக்கொள்ளமுற்படுகின்றார். ஏற்கனவே அவர் எடுத்த முயற்சி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைத் திருப்திப்படுத்திய போதிலும் ஜே.வி.பி போன்றவர்களைத் திருப்திப்படுத்தாததன் காரணமாக அவர் எதிர்பார்த்திருந்த பிரதமர் பதவி கிடைக்காமல் போனது.

பரதமர் பதவி கிடைக்காமல் போன ஆதங்கத்தை வெளிக்காட்டுவது தனக்கு இருக்கக்கூடியதான கௌரவத்தை பாதித்து விடும் என்ற காரணத்தினால் விழுந்தும் மீசையல் மண்படவில்லை என்பதாக மீண்டும் வெளிவிவகார அமைச்சர் பதவியை இரந்து பெற்றுக்கொண்டு முன்னரைப்போல தமிழ் மக் களுக்கு -விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற் படத் தொடங்கி விட்டார்.

இதன் ஆரம்ப நிகழ்வாகவே அவரின் இந்திய விஜயம் அமைந்துள்ளது. இலங்கை இனவிவகாரத்தில் ஓர் சமரசமான முடிவைக் காண்பதில் இந்தியாவின் பங்கும் பணியும் மிகமிக அவசியமானது. இதில் இரண்டாம் கருத்திற்கு இடமில்லை. ஆனால் இலங்கை இனவிவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதே இங்கு நோக்குதற்குரியது. இலங்கை இனவிவகாரத்தில் இந்தியா கொண்டுள்ள நிலைப்பாட்டை இலங்கை அரசு உணர்ந்து கொள் ளுமாயின் விடுதலைப் புலிகளுடன் பேசி நாமே எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் என்ற முடிவை எடுத்துக் கொள்ளும்.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கையில் இருக்கக்கூடியதான பிரச்சினை தீர்வதையோ அன்றி இப்பிரச்சினையில் சர்வதேச நாடுகள் தலையிடுவதையோ அந்நாடு விரும்பவில்லை.

சுருங்கக்கூறின் விடுதலைப் புலிகள் மீது கொண்டுள்ள பகைமைகாரணமாக மட்டுமன்றி அண்டை நாடான இலங்கையில் அடிக்கடி இனப்பிரச்சினை வெடித்து [illegible]டு க்லக நிலையில் இருக்கவேண்டும். அப்போதுதான் தனது பிராந்தியத்தின் மீதான ஸ்திரத்தைப் பலப் படுத்த முடியுமென இந்தியா கருதுகிறது. இதனை உணர்ந்து கொள்ளாத இலங்கை அரசு இந்தியா உடன் சேர்வதன் மூலமே விடுதலைப் புலிகளை நசுக்கமுடியும் என கருதிக் கொள்கிறது. இதற்காக இந்தியாவை தனது நட்பு நாடாக வைத்துக் கொள்ள விரும்புகிறது.

எதுவாயினும் இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் முதலில் இலங்கை அரசு தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என உளப்பூர்வமாக விரும்ப வேண்டும். இதை விடுத்து எந்த நாட்டினுடைய உதவிகளைப் பெற்றாலும் இலங்கையின் இனப்பிரச்சினை தீராதநோயாகவே இருக்கும் என்பதை அமைச்சர் கதிர்காமர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

# தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை உடைத்தெறிய சிங்களத் தொழிலாளர்கள் முன்வரவேண்டும்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த கால யுத்தம் என்பது தமிழ்த் தேசிய தொழி லாள வர்க்கத்தை மிக மோசமாகப் பாதித்துள்ளது. விவ சாயிகள், கடற்றொழிலாளர்கள், கூட்டுறவாளர்கள் என அனைத்து வகைத் தொழிலாளர்களுமே பாதிக்கப்பட்டுள் ளார்கள். இன்னும் தமது சொந்த நிலத்தில் விவசாயம் செய்யமுடியாமல், சொந்த வீட்டுக்குப் போகமுடியாமல், சொந்தக் கடலில் மீன் பிடிக்க முடியாத நிலையே இருக் கின்றது. இராணுவ ஆக்கிரமீப்பும் உயர் பாதுகாப்பு வலய அச்சுறுத்தல்களும் தமிழ்த் தொழிலாளி வர்க்கத்தை மிக மோசமாகப் பாதித்துள்ளது. சிங்கள அரசின் இவ் அடக்கு முறையை உடைத்தெறிய முன்வரும்படி உழைக்கும் சிங் கள வர்க்கத்திற்கு தமிழ் மக்கள் சார்பாக அழைப்பு விடுக் கின்றோம். சிங்கள தமிழ் தொழிலாளர் ஒற்றுமைக்கு இதுவே முதற்படியாக அமையும் எனவும் நம்புகின்றோம்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரே மச் சந்திரன் விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியில் இவ் விதம் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்செய்தியில் மேலும்,

உலகத் தொழிலாளரின் எழுச்சித் தினம் ஈழத் தமிழ் மக்களின் எழுச்சித் தினமாகவும் அமையவேண்டும் என்ப துடன், தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளைப் பெற்று தன்னாட்சியுடன் வாழ்வதற்கு சர்வதேச சமூகம் தனது உறுதியான ஆதரவை வழங்க வேண்டும் எனவும் கோருகிறோம்.

மேதினம் என்பது அடக்கபபட்டு அடிமைகளாக இருந்த தொழிலாள வர்க்கம் வீறுகொண்டெழுந்து தமது உரிமை களைப் பெற்ற தினமாகும்.

தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தால் அடக் கப்படுவதும் சிறுபான்மைத் தேசிய இனங்கள் பெரும்பான் மையினத் தேசிய இனங்களால் அடக்கப்படுவதும் அவர் கள் தமது உரிமைகளுக்காகப் போராடுவதும் மனித சமு தாயத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் போராட்டங் களையும் மாற்றங்களையும் குறித்து நிற்கின்றது.

இதைப்போலவே ஈழத்துத் தமிழ்த்தேசிய இனமும் கடந்த இரண்டு தசாபதங்களுக்கு மேலாக தனது உரிமைப் போராட்டத்தை நடத்திவருகின்றது. தமிழர் தாயகமான இலங் கையின் வடக்கும் கிழக்கும் ஆயிரக்கணக்கான போராளி களதும் பொதுமக்களதும் இரத்தத்தால் சிவந்து போயும் கூட சிங்கள தேசம் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு கௌரவமான தீர்வைக் காண முன்வரவில்லை.

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் ஓர் கௌரவமான தீர்வைக் காண்பது என்பதை நோக்கமாகக் கொண்டு தமி ழர் தரப்பின் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை நடததினார்கள். நிரந்தரத் தீர்வுக்கு முதற்கட்டமாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக் கான ஆலோசனைகளையும் முன்வைத்தார்கள். ஆனால் அவற்றை பரிசீலிப்பதற்குப் பதிலாக பாராளுமன்றத்தைக் கலைத்து, ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி, தனது சொந்த நிகழ்ச்சி நிரலை நடைமுறைபபடுத்தவே ஜனாதிபதி முயற்சி செய்தார்.

ஆனால் பெரும்பான்மைப் பலம் இல்லாத நிலையில் சிங்கள பௌத்த இனவாதிகளின் கூட்டுடன் உருவாக்கப் பட்டுள்ள ஓர் ஸ்திரமற்ற அரசு தமிழர் பிரச்சினையைத் தீர்க்குமா என்ற சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரண மாகவும் அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக வும் ஜனாதிபதி மீண்டும் பேச்சுவார்த்தைக்காக நோர்வேத் தரப்பை அழைத்துள்ளார்.

இப்பேச்சுவார்த்தையை ஜனாதிபதி உண்மையாகவே விரும்புகின்றாரா? இவருடன் கூட்டாக உள்ள சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் இப்பேச்சுவார்த்தைக்கு ஆதரவாக இருக்குமா போன்ற கேள்விகளும் எழுந்துள்ள சூழ்நிலையில் தான் தொழிலாள வர்க்கத்தின் எழுச்சித் தினமான மேதின்ம் வருகின்றது.

இத்தொழிலாளர் தினத்தில் தமிழ்த் தேசியத் தொழிலா ளர்கள் மாத்திரமல்லாமல் ஒட்டுமொத்தமான தமிழ் இன மும் கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி 13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பிற்குக் கொடுத்த ஆணையை அதாவது தமிழ் மக்களின் தாயகம் தேசியம் அவர்களின் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு கௌரவமான தீர்வொன்றிற்கு முன்வரவேண்டும் என்பதை இம் மே தினத்தினூடு சிங்கள தேசத்திற்கு கூறிவைப்போம் என் றுள்ளது. (உ)

# தாக்குதல் சம்பவங்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்கிறது ஐ.ம.சு.மு.

(கொழும்பு)

சமீபத்திய தாக்குதல்கள், பௌதத பிக்குகளை தூஷித்து எழுதிய சுவரொட்டிகளை ஒட்டியமை நாடு முழுவதும் விகா ரைகள் பல தாக்கப்பட்டமை தொடர்பில் ஐ.ம.சு.மு. மீது தெரிவித்த குற்றச்சாட்டுக்களை அந்த முன்னணி மறுத் துள்ளது.

முன்னணியின் தலைவர் நந்தன குணதிலக, சுசில் பிரேம ஜயந்த ஆகியோர் கூட்டாகக் கையொப்பமிட்டு இது தொடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையில்,

ஜாதிக ஹெல உறுமயவினாலும் ஏனையோரினாலும் எம்மீது தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சுதந்திர முன்னணி உடனடியாகக் கவனஞ் செலுத்தவுள் ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைகள் பற்றி எமக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை. அவர்கள் புத்த சாச னத்திற்கும் இலங்கைச் சமூகத்திற்கும் நல்லனவற்றைச் செய்ய முயற்சிக்கவில்லை.

மக்களால் தோற்கடிக்கப்பட்ட ஐ.தே.மு. அரசாங்கத் துடன் ஒத்துழைத்ததால் ஹெல உறுமய மீது மக்கள்நம்பிக்கை இழந்துள்ளனர். அத்துடன், புலிகளின் பிரதி நிதிகளான தமிழரசுக் கட்சியுடனும் ஹெல உறுமய ஒத்து ழைத்துள்ளது.

விகாரைகளைத் தாக்கியவர்களை கண்டறிவதற்கு மகாநாயக்க தேரர்களே அழுத்தம் கொடுக்க வேண்டும். ஐ.தே.முவின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக செயற்படுபவர்க ளாலும் ஹெல உறுமயவின் கெட்ட திட்டங்களாலும் தவ றாக வழிநடத்தப்படாமல் மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்றுள்ளது. (உ-6)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

கலியுகத்தில் ஆண்டவனது திரு நாமங்களைப் பக்தியுடன் பாடுவதே அவரை அடைவதற்குரிய எளிய சாத னையாம்.

உனது மனத்தில் அசையாத உறுதியுடன் இருப்பாயாக. ஆனால் மத வெறியையும் வெறுப்பையும் விட்டொழிப்பாயாக.

சுவாமி விவேகானந்தர்

# போக்குவரத்து அமைச்சில் ஒழுக்காற்று விசாரணைகளை இடைநிறுத்த உத்தரவு

(கொழும்பு)

பயணிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு போக்குவரத்து அமைச்சு விசேட பிரிவொன்றை ஆரம்பிக்கவுள்ளது.

அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பிரிவு 24 மணி நேரமும் இயங்கும் என போக்குவரத்துத் துறை அமைச்சர் பீரிஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாளாந்தப் போக்குவரத்து நடவடிக்கைகளின் போது பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள், வீதி விபத் துக்கள் என்பன குறித்து பயணிகள் இப்பிரிவுக்கு நேரடி யாக முறைப்பாடு செய்யலாம்.

இதேவேளை, நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் பின்னர் போக்குவரத்து அமைசசின் கீழ் வழங்கப்பட்ட அனைத்துப் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், நியமனங் கள் ஆகியன குறித்து ஒழுக்காற்று விசாரணைகளை இடைநிறுத்துமாறு அமைச்சின் செயலாளர் டி.எஸ்.ஜெய வீர உத்தரவிட்டுள்ளாா.

இதன்படி பொதுத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் பட்டதன் பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் ஒழுக் காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதுபற் றிய பூரண விபரங்களை தனக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசியல் அழுத்தங்கள் காரணமாகவே போக்குவரத்து அமைச்சு உட்பட சில அரச நிறுவனங்களில் முறைகேடு கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி-121)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

## பிரதமர் ...

இக் கூட்டத்தில் நுவரெலிய மாவட்ட அரச அதிபர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(இ -121)

## அரசு-புலிகள்...

தமிழ்ப் பிரிவினை வாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு 1980களில் இருந்து இப்பிரச்சினையில் இந்தியா "தலையிடா அணுகுமுறை" ஒன்றை கடைப் பிடித்து வந்துள்ளது.

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் கடந்த 2 வருடங்களாக யுத்தநிறுத்தம் ஒன்றை கடைப்பிடித்து வந்தாலும் சமாதான பேச்சுவார்த்தைகள் கடந்த வருடம் ஏப்பிரல் மாதம் முதல் தடைப்பட்டு விட்டது இது கவலையளிக்கும் விடயம் என்றும் ராஜேஷ்மிஸ்ராமேலும் தெரிவித்தார்.

(ம)

## கருத்தரங்கு

யாழ். கனகரத்திம் மத்திய மாகவித்தியாலயத்தில் 2004ல் க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பொருளியற் பாடம் தொடர்பான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் வீ மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ)

## தமிழ்ச் செல்வன்...

யமாக எங்களது தலைவரது கரிசனையையும், இயக்கத்தின் நிலைப்பாடுகளையும் அவர்களுக்கு கூறியிருக்கின்றோம். அத்தோடு எமது அதிருப்தியையும் தெரிவித்திருக்கின்றோம். ஏனெனில் மட்டக்களப்பு சம்பவமானது நிச்சயமாக இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திலிருந்து வந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில்தான் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இசசம்பவம் படைத்தரப்பின் ஆதரவோ, அல்லது அவர்களுக்கு தெரியாமலோ நடைபெற எச் சாத்தியக் கூறும இல்லை. இச் சம்பவத்தை யுத்த நிறுத்த மீறலாகவே அமைகின்றது என்ற தலைமைப் பீடத்தின் விசனத்தை அவர்களுக்கு தெரியப் புடுத்தியுள்ளோம்.

இச் சம்பவம் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உண்மை நிலையை விரைவில் வெளிப்படுத்த வேணடும் என்பதையும் நிச்சயமாக இப்படியான சம்பவங்கள் இந்த அமைதிச் சூழலை, யுத்தநிறுத்த சூழலை செம்மையாக நடைமுறைப் படுத்துவதற்கு சாத்தியப்பாடான சூழலை குழப்பும் என்றும் வலியுறுத்திக் கூறியுளளோம்.

இச்சம்பவம் ஒரு யுத்தநிறுத்த மீறல் என்பதையும், தாங்கள் இது சம்மந்தமான தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம் என்றும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு தலைவர் என்ற வகையிலும் எமது தலைவரிடம் தங்களுடைய தீவிர செயற்பாடு தொடர்பாக அவரிடம் தெரிவிக்கும்படி கண்காணிப்புக்குழு தலைவர் எம்மிடம் கூறியிருக்கின்றார். இந்த வகையில் விசாரணை மேற்கொண்டு வருகின்றார் என்பதனையும் இன்று தெளிவுபடுத்தி இருக்கின்றார் என தமிழ்ச்செல்வன் கூறியிருக்கின்றார்.

(ம)

## ஐ.ம.ச. முன்னணி - ஜாதிக ஹெல உறுமயவுடன் கூட்டுச் சேராது

### அடித்துக் கூறுகிறார் அநுரா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க தடை போடும் ஜாதிக ஹெல உறுமயவுடன் ஒருபோதும் கூட்டுச் சேர மாட்டாது என்று கைத்தொழில் சுற்றுலா முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.இது சம்மந்தமாக அமைச்சர் மேலும் கூறுகையில்,

அடுத்தமாதம் பாராளுமன்றம் கூடும்போது . ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது பெரும்பான்மை பலத்தை நிச்சயமாக நிருபிக்கும். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் நாம் கூட்டுச்சேர தயாராகவுள்ளோம். இந் நிலையில் இரண்டு கட்சித் தலைவர்களுடன் தாம் பேச்சுவார்த்தை நடாத்த தயாராக இருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

(ம)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
## கேள்விப் பத்திர அறிவித்தல்
### சீரஉடைத் துணி வழங்கல்

*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு பின்வரும் சீரஉடைத் துணி வழங்குவதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.*

*வெள்ளை பொலியஸ்டர் சேட்டிங் (White Poliyester Shirting 80/20) 1182.02 மீற்றர்.*

*மேற்படி துணிகளை பின்வரும் அளவுகளில் ஒரே துண்டாக பொதி செய்து தருவதற்குமான கூறுவிலைகள் எதிர்பார்க்கப் படுகின்றது.*

**வெள்ளை சேட் துணி**

| | |
|---|---|
| 2.74 மீற்றர் அளவில் | 03 துண்டு |
| 15.08 மீற்றர் அளவில் | 01 துண்டு |
| 6.75 மீற்றர் அளவில் | 145துண்டுகள் |
| 9.00 மீற்றர் அளவில் | 01 துண்டு |
| 10.4 மீற்றர் அளவில் | 15 துண்டுகள் |
| 14.97 மீற்றர் அளவில் | 01 துண்டு |

*கேள்விப்பத்திரதாரர் தங்கள் கூறு விலையுடன் மீளளிக்கப் படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 உம் மீளளிக்கத் தக்க வைப்புப் பணமாக ரூபா 5000.00 உம் காசுக் கட்டளையாக அல்லது காசாக நிதிக் கிளையில் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் சீர உடையின் 6" x 6" அளவுடைய மாதிரியுடன் நிதியாளர், யாழ்ப்பாண பல்கலைக் கழகம் திருநெல்வேலி என்ற முகவரியிட்டு 14.05.2004 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

*கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில "சீரஉடைகள் வழங்கலுக்கான கேள்விப் பத்திரம" UJ/F /SK/ T//04/04 என குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும் கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்தவர்கள் சமுகம் தரலாம்.*

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C-201)

## உத்திரக்கிரியை அழைப்பு

தோற்றம் 11 - 06 - 1956



மறைவு 16 - 04 - 2004

**அமரர் கந்தப்பச் செட்டியார் அசோகன் செட்டியார்**

தாரண வருடம் சித்திரை மாதம் (16-04-2004) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் சகோதரன் அவர்களின் வீட்டுக் கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 01-05-2004 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் ,அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
திரு. க. வைத்திலிங்கச் செட்டியார்,
திரு.க. ரமேஸ் செட்டியார்
(சகோதரர்கள்)

*160, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C - 150)




## University of Jaffna, Sri Lanka. Presentation Sessons - 2004

Two Postgraduate Rasearch Students are presenting papers on their subject of research. These presentations will be held in the Library Auditorium on the 30th April 2004 at 3.00p.m. The presentations will be made in Tamil.

The topics are follows :

1) "தமிழ் ஜப்பானியக் காதல் பாடல்களில் இயற்கை பற்றிய ஒப்பீட்டாய்வு" (A Comparative Study of the Nature in the Tamil - Japanese Love Poems) Miss. SelvaAmbikai Nadaraja (Research Student : M.Phill in Tamil)
2) "பல்லவர் காலப் பத்திப்பாடல்களில் நாட்டார் வழக்காற்றியற் பண்புகள்" (Aspects of the Folk Tradition in Bakti Poems of the Pallava Period) Mr. S Sivaniruttanantha (Research Student : Ph.D. in Tamil)

You are cordially invited for this session.

Registrar.

யாழ்ப்பாணத்தில் 72 வருடகால அனுபவம் பெற்ற மதுபான விற்பனையாளர்கள் மீண்டும் வாடிக்கையாளர் நலன் கருதி
243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் விற்பனையை ஆரமபித்துள்ளார்கள்
உள்நாட்டு வெளிநாட்டு மதுபான வகைகளை பெற்றுக் கொள்ள நாடுங்கள்
ஆ. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்
243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
ஸ்தாபிதம் - 1932
(சி-7352)